Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 42 • 08.05.2016

யாழ் எலக்ரோனிக்ஸ் & வோச் வேக்ஸ்

"இயங்காத காலத்தை இயக்குபவர்"

20ம் ஆண்டில் கால் பதிக்கின்றது (1996 – 2016)

உங்களுக்குத் தேவையான அனைத்து வகையான மணிக்கூடுகள் மற்றும் கல்குலேட்டர் தரமானதாகவும், நியாயமான விலையிலும் பெற்றிடவும் அனுபவம் மிக்க திருத்துனர்களைக் கொண்டு இயங்காத காலத்தை இயக்கி தருகின்றோம்.

தொ.பே. : 077 6136007

இல, 55–57, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



# பிக்குகளாகிய தமிழ் சிறுவர்கள்

நயினாதீவில் விகாரை அமைக்கிறார்கள்.. கொக்கிளாயில் விகாரை அமைக்கிறார்கள் என தினமும் அரசியல்வாதிகளும், ஊடகங்கம் ரென்சன் கூட்டிக் கொண்டிருக்க, சத்தமேயில்லாமல் இரண்டு தமிழ் சிறுவர்கள் பௌத்ததுறவியாகியுள்ளனர். அவர்களின் வீடுகளிற்கே நேரில் சென்றோம். தமிழ்பகுதிகளில் பௌத்தத்தை பரப்ப போகிறோம் என பரபரப்பை கிளப்பினாலும, ஏன் பௌத்த ததுறவியானோம் என்பதை மனம் திறந்தார்கள்.


தொடர்ச்சி 5-ம் பக்கம்



திடுதிப்பென கொழும்பில் ஒரு கூட்டணி அறிவிப்பு. முன்பின் அறிந்திராத கட்சிகளின் பெயர்களையெல்லாம் குறிப்பிட்டு கூட்டணியென அறிவித்துள்ளார்கள். இந்த கூட்டணிதான் இன்றையதிகதியில் இணையவாசிகளின் கையில் சிக்கியுள்ள பூமாலை. இணையப்பொழுதுபோக்கு ஒருபக்கம் இருக்க... ஏன் திடிரென இந்த கூட்டணி உருவானது? இதன் பின்னணியில் யார் உள்ளனர்?

தொடர்ச்சி 6-ம் பக்கம்


# சம்திங்.. சம்திங் கூட்டணி!



அப்பாத்தோழரை ஏன் மறந்தனர் 4



வெக்கையிலிருந்து தப்பிக்க ஐடியா 15



கோட், சூட் போட்ட திருடர்கள் 22

# பறவைக்குரியதை பறவைக்கே கொடுத்து விடுங்கள்

வடக்கின் சில இடங்களில் பறவைகள் சரணாலயம் அமைப்பதற்கான உத்தேசப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் வடமராட்சி கிழக்கில் ஏற்கனவே இருந்த சரணாலயத்தை விஸ்தரிக்க திட்டமிடுகிறார்கள். கிளிநொச்சியில் கௌதாரிமுனை மற்றும் வன்னேரியை பறவைகள் சரணாலயமாக்கலாமென அரச அதிபர் பரிந்துரைத்துள்ளார்.

வடக்கிலுள்ள ஒரேயொரு பறவைகள் சரணாலயம் சுண்டிக்குளம். யுத்தத்திற்கு முன்னர் அது சரணாலயமாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், யுத்தகாலத்தில் அது அதிகம் கவனத்தில் கொள்ளப்படவில்லை. பறவைகள் சரணாலயம் என்றால் என்ன, அந்தப்பகுதியில் எப்படியான நடைமுறைகள் உள்ளன என்பது பற்றி அறியாமலே ஒரு தலைமுறை வளர்ந்தது. யுத்தத்தில் ஏராளம் உயிரிழப்புக்களை சந்தித்து, இடப் பெயர்வுகளை சந்தித்ததாலோ என்னவோ பறவைகளிற்கு ஒரு சரணாலயம் அமைப்பது என்ற பேச்சை பலரும் அக்கறைப்படுத்த வில்லை. தமிழ் புலமைப்பரப்பில், ஊடகவியலாளர்கள் மத்தியில் கூட அது பற்றிய போதிய விழிப்புணர்வு இருக்கவில்லை.

வடமராட்சி கிழக்கு பறவைகள் சரணாலயத்திற்கு அண்மையில் கடுமையான எதிர்ப்பு எழுப்பப்படுகிறது. அந்த பிரதேச மக்களில் ஒரு பகுதியினர் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். அவர்கள் கூறும் காரணம், தமது வாழிடங்கள் பறிக்கப்படலாம், வாழ்வாதாரம் பறிக்கப்படலாம் என்பது. இதனை வெளியிலிருந்து எதிர்க்கும் பலர் கூறும் காரணம், சிங்கள குடியேற்றம் அமைக்க, சிங்களவர்களை வடக்கில் பரவலடைய வைக்க இப்படியான திட்டங்கள் அமைக்கப்படுவதாக.

உண்மையில் இப்படியான வாதங்களை செவிமடுக்கவே வேண்டியதில்லை. ஏனெனில், பறவைகளிற்கு சரணாலயம் அமைப்பது அத்தியாவசியமான ஒன்று. இலங்கை விரைவாக அபிவிருத்தி அடைந்துவருவதில் பேரிடரை சந்தித்து கொண்டிருப்பது இயற்கையும், பறவைகளும், காட்டுயிர்களுமே. வகைதொகையின்றி அழிக்கப்படும் வனங்கள், மரங்கள் சூழல் சமநிலையை தலைகீழாக புரட்டிப் போட்டுள்ளது. இப்பொழுது உலகம் எதிர்கொண்டுள்ள பேராபத்தான காலநிலை மாற்றம் இதன் விளைவு. விரைவான அபிவிருத்தி பறவைகளையும், விலங்குகளையும் துரத்திக் கொண்டேயிருக்கின்றன. சில வருடங்களின் முன் சகஜமாக சந்தித்து கொண்டிருந்த பல உயிரினங்கள் இன்று அரிதானவை பட்டியலில் அடங்கிவிட்டன.

சூழல் சமனிலையிலும், உணவுச்சங்கிலியிலும் ஒவ்வொரு உயிரினமும் இன்றியமையாத பாத்திரத்தை வகிக்கின்றன. அவற்றை தொழில்நுட்பத்தால் ஈடுகட்ட முடியாது. கண்ணிற்கு தெரியாத அந்த விடயங்களில் அக்கறை செலுத்த தவறுவதாலேயே இந்த காலநிலை மாற்ற பேராபத்தை எதிர்கொண்டுள்ளோம்.

தமக்கான இயற்கை சூழலில் பறவைகளும் மிருகங்களும் வாழ்வது அவசியம். அவற்றின் வாழிடங்களை இரக்கமேயில்லாமல் சுருக்கி விட்டோம். நகரங்கள் மத்தியிலெல்லாம் இனி அவற்றுக்கான சூழலை ஏற்படுத்திக் கொண்டிருக்க முடியாது. ஆண்டவரிற்குரியதை ஆண்டவரிற்கும் செசாருக்குரியதை செசாருக்கும் கொடுத்து விடுங்கள் என்று பைபிள் வசனமொன்றுண்டு. அதுபோல, பறவைகளிற்குரியதை பறவைகளிற்கே கொடுத்துவிட வேண்டும்

சுண்டிக்குளம் மற்றும் அதனை அண்டிய பகுதிகள் வலசைப் பறவைகளின் இலங்கைக்கான நுழைவாயிலாகவும் உள்ளது. வலசைப் பறவைகளின் வடக்கு தலைநகரும் அதுதான். பறவைகளிற்குகந்த அந்த சூழலை நாம் பறிப்பது நியாயமாகாது. அதனால் அந்தப்பகுதியில் சரணாலயம் அமைப்பதே சிறந்தது. ஆனால், அந்தப்பகுதி மக்களின் வாழிடங்களை பறித்து அதனை செய்ய வேண்டியதில்லை. மக்களின் வாழிடங்களும், பறவைகள் சரணாலயமும் முரண்பட்டு கொள்ளாத ஒரு சூத்திரத்தை அதிகாரிகள் கண்டறிய வேண்டும். நிரந்தரகுடியிருப்புக்களை அங்கிருந்து அகற்றாமல் சரணாலயப்பணிகளை முன்னெடுக்கலாம்.

அந்தப்பகுதி மக்களின் வாழிடங்களிற்கு ஆபத்தில்லை என்ற ஒரு விடயத்தை உறுதி செய்தால் தாமதமின்றி சரணாலயப்பணிகளை ஆரம்பித்து விட வேண்டும். சிங்களக்குடியேற்றம் அமைப்பார்கள், சிங்களவர்களை அழைத்து வருவார்கள் என்ற வாதங்களை வைத்துக் கொண்டிருப்பதில் பலனில்லை. சரணாலயப்பகுதியில் இராணுவம் விடுதி நடத்துவது, தமிழ் மீனவர்களை தடுத்துக் கொண்டு சிங்கள மீனவர்களை அனுமதிப்பது போன்ற விடயங்களை நடக்கவிடாமல் தவிர்த்துக் கொள்வது சரணாலயம் அமைத்ததன் பின்னரான பணிகள். இவற்றை நடைமுறைப்படுத்துவதில் எந்த விட்டுக்கொடுப்பிற்கும் இடமிருக்ககூடாது.

பறவைகள் சரணாலயத்தை அரசியல்காரணங்களிற்காக எதிர்ப்பவர்கள் புத்திபூர்வமாக சிந்திக்க வேண்டும். ஏனெனில், இந்த பூமி தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லீம்களிற்கு மட்டுமே உரியதல்ல.

அது, பறவைகள், விலங்குகள், மரங்கள் என எல்லா உயிரினங்களிற்குமுரியது.


**தீபம்**

211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

☎ 0212216633, 0214927561

ஆசிரியர்பீடம் : editor@deepam.lk ☎ 0214927562
சந்தா : subs@deepam.lk ☎ 0768255566
விளம்பரம் : sales@deepam.lk ☎ 0768255567
செய்திகளுக்கு : news@deepamnews.com

# சொன்னார்கள்



**இரா. சம்பந்தன் – எதிர்க்கட்சித் தலைவர்**

நாட்டில் கடந்த காலங்களில் ஊடக நிறுவனங்கள் பல தாக்கப்பட்டும், ஊடகவியலாளர் பலர் கொல்லப்பட்டும் உள்ளனர். இது குறித்தான குற்றங்களுக்கு தண்டனை வழங்கியே தீரவேண்டும். எனினும் நல்லாட்சி அரசாங்கம் ஆட்சி வந்து இதுவரையிலான காலப்பகுதியில் எவ்வித காத்திரமான நடவடிக்கைகளோ விசாரணைளோ முன்னெடுக்கவில்லை. அரசியலமைப்பிற்கான ஏற்பாடுகளின் போது ஊடங்களின் பங்களிப்பு மிகவும் அத்தியவசியமாகும்.



**பொ. ஐங்கரநேசன் – வடமாகாண அமைச்சர்**

நிபுணர் குழு அறிக்கையில் எந்த இடத்திலும் சுன்னாகம் நிலத்தடி நீரில் எண்ணெய் கலக்கவில்லை என்று குறிப்பிடப்படவில்லை. இதை நாம் மிகத் தெளிவாக குறிப்பிடுகின்றோம். நிபுணர் குழு ஆராய்ந்த விடயங்களில் கண்டுபிடிக்கப்பட்டது என்னவென்றால் எண்ணெயில் இருக்கின்ற ஆபத்தான நச்சு மாசுக்கள்தான் நீரில் கலக்கவில்லை என்பதே. மாறாக எண்ணெய் கலக்கவில்லை என்று நிபுணர் குழு எந்த முடிவையும் எடுக்கவில்லை



**கெமுனு விஜயரட்ன – தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர்**

தனியார் பஸ் கட்டணங்கள் வெகுவிரைவில் அதிகரிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. தேசிய அரசாங்கத்தினால் வற்வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் பஸ் கட்டணத்தை அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன.




**மைத்திரிபால சிறிசேன – ஜனாதிபதி**

மேன்மைப் பொருந்திய பாராளுமன்றத்தின் கௌரவத்தையும் பாராளுமன்ற உறுப்பினருக்குரிய கௌரவத்தையும் பாதுகாக்க வேண்டியது பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பொறுப்பாகும். ஒரு ஒழுக்கப் பண்பாடான சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு தலைமைத்துவத்தை வழங்குவதற்குப் பொருத்தமானவர்களுக்கு தமது பெறுமதியான வாக்குகளைப் பயன்படுத்த வேண்டியது மக்களுக்குள்ள பொறுப்பாகும்.



**அசேல சம்பத் – உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர்**

இறக்குமதி செய்யப்படும் பொருட்களால் தயாரிக்கப்படும் அனைத்து உணவு வகைகளின் விலைகளும் அதிகரிக்கப்படவுள்ளது அரசாங்கம் அறிமுகப்படுத்திய புதிய வரி காரணமாக இறக்குமதி செய்யப்படும் பொருட்களால் தயாரிக்கப்படும் அனைத்து வகை உணவு வகைகளின் விலைகளும் 10 ரூபாவால் அதிகரிப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.



**டி.எம்.சுவாமிநாதன் – அமைச்சர்**

வடக்கில் 65 ஆயிரம் வீட்டுத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு பல முட்டுக்கட்டைகள் காணப்படுகின்றன. எனினும் நாம் அதனை தொடர்ந்தும் முன்னெடுப்போம். அத்திட்டத்தை எவ்வாறாயினும் முன்னெடுப்போம் அது குறித்த பதிலையும் ஒருவார காலப் பகுதியினுள் வழங்குவோம்.

# க்ளிக் பக்கம்



படப்பிடிப்பாளர்: ம.நிஷாங்கி

இடம்: யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தின் சூரிய உதயமொன்று. சிறிய ஒளிப்பொட்டிலிருந்து உலகம் விடியலை காண ஆரம்பிக்கும் தருணம்.
**என்னைப்பற்றி:** நான் முகுந்தன் நிஷாங்கி. யாழ்ப்பாணம். யாழ்ப்பாண பல்கலைகழகத்தின் பொறியியல்பீட மாணவி.



குறிப்பு: உங்கள் படங்களையும் அனுப்பி வையுங்கள் editor@deepam.lk



www.facebook.com/kanapathipillai.prapakaran

நரை தலைக்குத்தான்
'தல'யின் 'திரை'க்கு இல்லை.



www.facebook.com/Venthan80

தலையில் பூ வாசமும்
தரையில் பீ வாசமும்
இது தான் தமிழ்நாடு.



www.facebook.com/irosh.iroshan

மழைதேனீர்இளையராஜாகவிதை போன்ற கிளிஷேக்களுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்த அழகான தமிழ் வார்த்தை 'நீ'.



www.facebook.com/fayas.ahmed1

அது செல்போன் இலங்கையில் அறிமுகமான காலகட்டம்.அந்த பென்னம்பெரிய செங்கல் போன்ற போனை கையில் வைத்துக்கொண்டு அலைவது சமூகத்தில் ஒரு பெரிய மதிப்பை தந்தது. அப்போது இலங்கையில் இருந்த ஒரேயொரு வலையமைப்பு செல்டெல் மாத்திரமே.

நம்மட ஊர்ல ஒரு ஹாஜியார் இருந்தார் .இவரு ஒரு கடோல் கட்டி வாங்கிட்டு படுத்தின அலம்பல் இருக்கே தாங்க முடியல்லை.ஹாஜியார்ட இருந்த ஒரு விசேட குணம் என்னன்னா இவர் எந்தளவுக்கு பெருமையடிப்பாரோ அந்தளவுக்கு கடைந்தெடுத்த கஞ்சன்.

அதனால நாம ஒரு பத்து பேர் செட்டாகி ஆளுக்கு ஐந்து ரூவாபோட்டு ஒருத்தன் மாறி ஒருத்தன் ஹாஜியாருக்கு கொஞ்ச நேரத்துக்கு ஒருக்கா கோல் எடுத்தோம்.எல்லாரும் ஒரே ஒரு வசனத்தை சொல்லிட்டு போனை வைச்சிட்டோம்.

மறுநாளே ஹாஜியார் வந்து சகட்டு மேனிக்கு எங்க அம்புட்டு பேரையும் திட்டினாலும் அன்னில இருந்து போனை காட்டி பெருமை அடிக்கிறதை விட்டுட்டாரு. ஏன்னா நம்ம சொன்ன அந்த ஒரேயொரு வசனம் அப்பிடி.

"ஹலோ, ஹாஜியாரா?ஓங்கட ஒரு ரூவா இப்ப வெட்டி பட்டு இருக்குமே,வெக்குறேன்"

பி.குஅந்த காலத்தில் செல்டெல் இன்கமிங் கோல்களுக்கு ஒரு ரூவா அறவிட்டுக் கொண்டு இருந்தது .



www.facebook.com/umasuthan2

நடிகர் ரஞ்சன் ரமநாயக்க நல்லமனிதர். 'சிங்கள சினிமா ஹீரோ' என்று சொன்னாலே உடனே குபீரென்று சிரித்துவிடும் பழக்கமிருந்த எனக்கு, அவர் பற்றிக் கேள்விப்பட்ட பிறகுதான் அவரின்மீது ஒரு மரியாதை வந்தது. நாம் கொண்டாடிக்கொண்டிருக்கும் எந்த சூப்பர் ஸ்டார்களை விடவும், ஒருபடி மேலான உண்மையிலேயே மக்களோடு மக்களாக, உதவி செய்யும் மனப்பான்மையோடு வாழ்பவர் என்பது ஆச்சரியமளித்தது.


என்ன, அவரிடமுள்ள மிக மோசமான கெட்டபழக்கம் எனக்குத் தெரிந்து ஒன்றுதான்....

படம் நடிப்பது!





காத்தான்குடியில் பதிவான புகைப்படம். ஆசிரியர் ஒருவரால் மரக்கறி கடைக்கு அனுப்பபட்ட மாணவன்.



கடந்தவார கலக்கல்

தீபத்தின் சமூகவலைத்தளங்களில் கடந்த வாரம் பிரசுரமாகி காட்டுத்தீயாக வாசகர்களால் பகிரப்பட்ட படம் இது. நாமல் ராஜபக்ச செய்யும் கயிற்றுப்பயிற்சி. நாமல் தனது இன்ஸ்டகிராம் பக்கத்தில் பதிவேற்றியிருந்தார். வழக்கம் போல நேயர்கள் கழுவி ஊற்றியதுதான் அதிகம்!






# அரசியல் கிசுகிசு

## எங்கப்பன் குதிருக்குள் இல்லை

முன்னாள் போராளிகள் வரிசையாக கைது செய்யப்பட்ட பரபரப்பு கடந்த வாரம்தான் மெல்ல தணிந்தது. இதில் கவனிக்கத்தக்க விடயம் என்னவென்றால், அண்மையில் கைதானவர்கள் அனைவரும் விடுதலைப்புலிகள் அமைப்பின் முக்கியஸ்தர்கள். ஊரறிந்தவர்கள். இதில் இன்னொரு விவகாரமும் உள்ளது. அண்மையில் கைதான பிரபல்யங்கள் பலரும் இராணுவப்புலனாய்வு பிரிவின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள்.


யுத்தத்தின் இறுதியில் மற்றைய போராளிகள் நந்திக்கடல் கரைகளில் சரணடைந்தார்கள். எனினும் அண்மையில் கைது செய்யப்பட்டவர்கள் கதை சற்று வித்தியாசமானது. அவர்களின் கைதும், விடுதலையும் “விவகாரமானது“. இவர்களை இராணுவப்புலனாய்வுபிரிவு கையாண்டதாக அப்பொழுது தகவல் வெளியாகியிருந்தது.

அவர்களின் பிடியிலிருந்தவர்கள்தான் இப்பொழுது கைதாகியுள்ளனர். விடுதலைப்புலிகளை மீள கட்டியெழுப்ப எத்தனித்தார்கள் என்று கதை சொல்லப்பட்டாலும், இதில் வேறு விவகாரமும் உள்ளதாம். சாவகச்சேரியில் தற்கொலை அங்கி கண்டுபிடிக்கப்பட்டதும், அது கொழும்புக்கு எடுத்துவரப்பட தயாராக இருந்தது என முதன்முதல் தகவல் வெளியிட்டு பரபரப்பை கிளப்பியவர் மகிந்த தரப்பிலிருக்கும் ஜி.எல்.பீரிஸ்.

அந்த தரப்பு உள்விளையாட்டுக்கள் காட்டியதாலா இந்த சிக்கல் என்பதுதான் இப்பொழுது பரபரப்பாக விவாதிக்கப்பட்டு கொண்டிருக்கிறது. பாதுகாப்பு கட்டமைப்பில் எஞ்சியுள்ள விசுவாசிகளை பயன்படுத்தி அப்படியொரு திட்டத்திற்கு முயன்றிருக்கலாம் என்றும் ஊகிக்கப்படுகிறது.

ஜீ.எல்.பீரிஸ் எங்கப்பன் குதிருக்குள் இல்லையென்ற பாணியில் பேசியதும் சந்தேகத்தை பரவலாக்க காரணம்.

# அப்பாத் தோழரை ஏன் மறந்தனர்?



அருணன்

இறந்தவர்களை நினைவுகூருவது மரபு . அந்தவகையில் டெலோ தலைவர் ஸ்ரீசபாரத்தினத்தை நினைவுகூர எதிர்வரும் 8ம் திகதி யாழ்.சட்டநாதர் கோயிலடியில் ஒரு நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந் நிகழ்வில் சகோதரப் படுகொலைகள் பற்றி கட்டாயம் வருத்தம் தெரிவிக்கப்படும். இது இயல்பானதே.

ஸ்ரீலங்கா சோசலிசக் கட்சித் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய உட்பட பரந்துபட்டளவில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இவ் அழைப்பில் டக்ளஸ் தேவானந்தா ஏன் விடுபட்டார் என்பது புரியாத புதிராக உள்ளது.

29.04.1986 ல் இருபாலையில் உள்ள ஒரு மயானத்தில் ஸ்ரீசபாரத்தினத்தின் சடலம் கட்டைகள் மீது அடுக்கப்பட்டிருந்தது. அங்கே வந்த ஒருவர் "இதே இடத்திலதான் தாசின்ர சடலமும் கட்டை அடுக்கப்பட்டுக் கொளுத்தப்பட்டது" என்று கூறினார் .

குறுகியகாலத்திற்கு முன்னால்தான் தாஸூம் அவரது நண்பர்களும் யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்திற்குள் வைத்துக் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர். வடமராட்சியைச் சேர்ந்த தாஸின் உறவினர்களும் நண்பர்களும் இறந்தவர்களின் சடலங்களைத் தம்மிடம் கையளிக்க வேண்டுமெனத் தீவிரமான போராட்டங்களை நடத்தினர். யாழ்.பல்கலைக் கழகமே இவ் போராட்டங்களின் மையமாக விளங்கியது . அங்கு கலந்து கொண்ட பலரும் சடலங்களை கோர ஒரு குழுவை உருவாக்கினர். இவ் விடயங்கள் அனைவருக்கும் தெரிந்தவைதான்.

இந்தக் குழுவுக்கு தலைமை தாங்கின டக்ளஸ் சிறியரிடம் “மக்களின்ர போராட்டங்களுக்கு மதிப்பளிச்சு அந்த சடலங்களைத் தாங்கோ“ எனக் கேட்டார். கையத் திருப்பி மணிக்கூட்டப் பார்த்த சிறியர் “இந்தநேரம் எல்லாம் சாம்பலாப் போயிருக்கும்“ எண்டார். இன்னும் கொஞ்சநாளில தானும் இதே இடத்தில எரிவேனென கொஞ்சமும் நினைச்சுப் பார்த்திருக்கமாட்டார்" என அவர் மேலும் சொன்னார். கொள்ளி வைக்கபோனவரோ தமிழகத்தில் நிகழ்ந்த முன்னாள் டெலோ உறுப்பினர் ரமேசின் (சாரதி) மரணத்தையும் நினைவு கூர்ந்தார். ஸ்ரீசபாரத்தினத்துடனான பழைய சம்பவங்கள் அவருக்கு கண்ணீரை வரவழைத்தன. எல்லோரும் எலும்பினாலும், சதையினாலும் உருவாக்கப்பட்ட மனிதர்கள் தானே. ஒன்றுமட்டும் உண்மை. தாஸ் சிறியரோடு இருந்திருந்தால் தாஸின் உயிர்போன பின்பே சிறியரின் உயிர்போயிருக்கும்.

மாவை, கஜேந்திரகுமார் என தமிழ் அரசியலில் எதிரும் புதிருமாக இருப்போரை அழைத்தவர்கள் டக்ளஸை அழைத்தால் ஒருவேளை அவர் இச்சம்பவங்களை நினைவு கூரக்கூடும் என நினைத்துத்தான் அதைத் தவிர்த்திருக்கிறார்கள் போல இருக்கிறது. இதுதான் காரணம் என்றால் மிகப்பெரும் தவறு. ஏனெனில் தாஸுக்கு டெலோ இயக்கம் பத்திரிகைகளில் அஞ்சலி செலுத்துகிறது . அது மனப்பூர்வமாக செய்யப்படுகிறதென்றால் நினைவுகூரும் போது ஸ்ரீசபாரத்தினத்தின் படத்துடன் தாஸின் படத்தையும் வைக்க வேண்டும். அதுபோல் டக்ளஸ்சையும் உரையாற்ற அழைக்கவேண்டும். ஏனெனில் அக்காலகட்டத்தில் ஈ . பி .ஆர். எல் . எவ் இயக்கத்தின் இராணுவப் பிரிவான மக்கள் விடுதலைப்படையின் (P.L.A.) தளபதி அவர் . ஈ . பி .ஆர். எல் . எவ்வின் வழிமுறைகளுக்கும், ஸ்ரீசபாரத்தினத்தின் நிலைப்பாட்டுக்கும் பாரிய ஒற்றுமை இருந்தது.




பாரிசிக்கு விஜயம் செய்தபோது டெலோவின் சார்பான சஞ்சிகை ஒன்றுக்கு பேட்டியளித்த ஸ்ரீசபாரத்தினம் " தமிழீழ விடுதலைப் போராட்டம் என்பது இந்தியாவின் பாதுகாப்புடன் பின்னிப்பிணைந்துள்ளது. எனவே இந்தியா எடுக்கும் முடிவைப் பொறுத்தே எமது போராட்டம் அமையும். நாம் சிறந்த போர்வீரர்களாக இருப்போம்‘ என்றார் . சாவகச்சேரி பொலிஸ் நிலைய தகர்ப்பு பற்றிய டெலோவின் காணொளிக்காட்சிகளின் போது இக்கூற்றை ஒரு பெண்குரல் நினைவுபடுத்தியது.

இந்தியாவின் முயற்சியினால் ஸ்ரீலங்காப் படைகளுக்கும் தமிழ்அமைப்புகளுக்கும் இடையில் போர்நிறுத்தம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இது தொடர்பாக “பேச்சுவார்த்தையும், போர்நிறுத்தமும்“ என்ற தலைப்பில் பத்மநாபா ஒரு சிறு வெளியீட்டை வெளியிட்டிருந்தார். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்தியகுழு உறுப்பினரும் , அதன் செயலாளர் நாயகமும் , புரட்சிகர இராணுவக் கமிசன் தலைவருமான தோழர். க. பத்மநாபா எனக் குறிப்பிட்டு இராணுவச் சீருடையுடன் முதன்முதலாக அவர் காட்சி அளித்தார். அந்நூலின் 18ம் பக்கத்தில் "இந்தியா தமது நலனிலிருந்தே எமது போராட்டத்தைப் பார்ப்பதாக சிலர் எல்லாம் தெரிந்தது மாதிரி குறிப்பிடுகின்றனர். அப்படித்தான் இந்தியா தனது நலனிலிருந்து எமது போராட்டத்தைப் பார்ப்பதாக வைத்துக் கொள்வோமே. அதில் என்ன தவறு“ எனக்கேட்டிருந்தார்.

அப்போது ஒத்த கருத்துடையவர்கள் என்ற வகையில் டக்ளசைக் கூப்பிட்டிருக்கலாம்.

இந் நிகழ்வுக்கு வரப்போகின்றவர்களின் பெரும்பாலானோர் தமிழரின் விடிவுக்கு வழி காட்டவா போகிறார்கள்? 2009 பேரழிவுக்குப் பின்னாவது ஒருமித்த கருத்து ஏற்படவில்லையே? ஆளை ஆள் குழிபறிப்பதும் அதனை நியாயப்படுத்துவதும் தானே நடக்கிறது. அரசியல் தீர்வு பற்றி சிங்கள மக்கள் மத்தியில் புதிய சிந்தனைகளை உண்டாக்க இரு சிங்களத்தலைவர்களினதும் வருகை பயன்படுமானால் அதுவே இந்நிகழ்வின் பயன் .



வெள்ளைவான் கடத்தல்களை முறியடிக்க கோரி, அம்பாறை மாவட்ட செயலகத்தின் முன்னால் கடந்த வாரம் போராட்டம் நடத்திய காணாமல் போனவர்களின் உறவினர்கள், மாவட்ட அரசஅதிபரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.




1-ம் பக்க தொடர்ச்சி


தமிழ் சிறுவர்கள் இருவர் பௌத்த பிக்குகளாகிவிட்டனர்.

இந்த ஒரு வரி செய்திதான் தமிழர்களின் லேட்டஸ்ற் பரபரப்பு. குறிப்பாக இணையத்தளவாசிகள் இந்த விவகாரத்தை பிய்த்து உதறிக் கொண்டிருக்கிறார்கள். தமிழர்கள் எப்படி பௌத்த பிக்குவாகலாம் என ஒரு தரப்பு எகிற, மதத்தை தேர்வு செய்வது அவரவர் உரிமையென இன்னொரு தரப்பு எதிர்வாதம் வைக்கிறது.

தமிழ் அரசியலில் தியாகியாகுவதற்கு இலகுவான றூட் உள்ளது. சிங்கள குடியேற்றம், தமிழர் நிலத்தில் பௌத்த விகாரையா என ஹைடெலிபசில் நாலு கூட்டத்தில் பேசினால் போதும். பேஸ்புக்கில் லைக்சும் அள்ளும். தேர்தலில் பெட்டியும் நிரம்பும். கொக்கிளாய் பௌத்த விகாரை கட்டும்பணியை உடன் நிறுத்த வேண்டுமென வடக்கு முதல்வர் கடிதம் எழுதியதுதானே



தனுசிகன்



தனுஜன்



குடும்பத்தினருடன் சிறுவயது தனுஜன்

கடந்த வாரம் தமிழர்களின் ஆசுவாச செய்தி!

நாய்க்கு மரத்தை கண்டால் என்னவோ தோன்றுவதைப் போல சிலருக்கு மரத்தை கண்டால் புத்தர்சிலை வைக்க வேண்டுமென தோன்றுவதுதான் இதற்கு பிரதான காரணம். விகாரை கட்டுவதில் ஒரு தரப்பு குறியாக இருக்க, இதை தடுப்பதில் இன்னொரு தரப்பு அக்கறையெடுக்க தமிழ் சிங்கள பதட்டம் நீடிக்கிறது.

இப்படி இரண்டு மதங்களிற்கிடையில் பதற்றம் நீடிக்கும் நிலையில், இரண்டு தமிழ் சிறுவர்கள் பௌத்த மதத்திற்கு மாறினால்... நம்மாட்கள் கொதித்துப் போய்விடு வார்கள் அல்லவா. வவுனியாவை சேர்ந்த இரண்டு சிறுவர்கள் பௌத்தத்திற்கு மாறி விட்டார்கள் என்ற செய்தி வெளியானதும் ஆளாளுக்கு கொதித்து, இணையத்தில், சமூக வலைத்தளத்தில் அறப்போர் தொடுக்க ஆரம்பித்துள்ளனர். நம்மாட்களின் இரத் தத்தை கொதிக்க வைத்த அந்த இரண்டு சிறுவர்களையும் தேடி அவர்களின் வீடு களிற்கே சென்றோம்.

### தனுஜன் TO ஸ்ரீ கொக்கலிய சுமன ஹிமி

புத்தளம் குருஞ்சம்பிட்டியில் உள்ள பன்சாலை ஒன்றில் வவுனியாவை சேர்ந்த இரண்டுதமிழ்சிறுவர்கள் பௌத்தபிக்குகளாக பயிற்சி எடுத்து வருகின்றனர்.

பௌத்தபிக்குவாகபயிற்சிபெறுபவர்களில் ஒருவர் பதின்னான்கு வயதான சிறிகரன் தனுஜன். இப்பொழுது அவரை தனுஜன் என்றால் யாருக்கும் தெரியாது. ஸ்ரீ கொக்கலிய சுமன ஹிமி என்றால்த்தான் தெரியும்.

கொக்குவெளியிலுள்ள அவரது வீட்டிற்கு சென்றோம். தாயார்தான் எம்மை வரவேற்றார். மகன் புத்தளத்தில் விகாரையில் தங்கியிருந்தார்.

சிறிகரன் மேனகா தம்பதிக்கு தனுஜனும் மூன்று பெண் பிள்ளைகளும். 2008 இல் சிறிகரன் இறக்கும்வரை குடும்பவாழ்க்கை சுமுகமாகத்தான் சென்று கொண்டிருந்தது. அதன் பின்னர்தான் குடும்பத்தில் பொருளாதார பிரச்சனை தோன்றியது.

வவுனியாவில் படித்துக் கொண்டிருந்த தனுஜன் திடீரென மின்சாரம் தாக்கி நோய்வாய்ப்பட்டான். பிள்ளைகளை பாராமரிக்க வறுமையுடன் போராடிக் கொண்டிருந்த மேனகாவிற்கு இது மேலும் இடியாக அமைந்துவிட்டது.

"பிள்ளைகளை வளர்க்க, படிப்பிக்க நான் கஸ்ரப்படுவதை பார்த்து எனக்கு தெரிந்த சிங்கள ஆசிரியை ஒருவர் பௌத்தபிக்குவொருவரை அறிமுகப்படுத்தினார். விரும்பினால் அவருடன் மகனை அனுப்பலாம், நன்றாக படிப்பிப்பார் என்றார்கள். அப்பொழுது மகனிற்கு 12வயதுதான். அவனின் விருப்பத்தை கேட்டேன். அவன் போகப்போவதாக சொன்னான். பௌத்த பிக்கு ஐயாவிடம் ஒப்படைத்துவிட்டேன்.

அவர் சொன்னார், மகனின் விருப்பப்படி படிக்க விட வேண்டுமென. நானும் சம்மதித்தேன். 2014இல் தன்னுடன் அழைத்து சென்றார். அவன் பௌத்தபிக்குவாக வர விரும்புவதாக சொன்னதால் அவர் இரண்டு வருடமாக படிப்பிக்கிறார்.

மகனை பார்ப்பதற்கு சில மாதங்களிற்கு ஒருமுறை விகாரைக்கு போவேன். என்னைக் காணும்போதெல்லாம் "விரைவில் பௌத்த பிக்குவாக வருவேன். எமது கொக்குவெளி பகுதிக்கு வந்து பன்சாலையொன்று அமைத்து பௌத்தத்தை போதிக்கப் போகிறேன்" என அடிக்கடி சொல்வான். ஒரேயொரு மகன்தான். என்ன செய்வது, அவனது விருப்பப்படி செய்யட்டும்" என கலங்கிய கண்களுடன் சொன்னார் தாயார் மேனகா.

வீட்டில் இருந்தபோது தனுஜனிற்கு அடிக்கடி வருத்தம் வரும். நன்றாக படிக்கவும் மாட்டான். ஆனால் இப்பொழுது நல்ல

தொடர்ச்சி 8-ம் பக்கம்

### கொக்கலிய ஜினாலங்கார

எனக்கு தமிழ் மறந்து போச்சுது. ஆனாலும் தமிழை மறக்க கூடாது, சிங்களத்தில் கற்றாலும் தமிழில்த்தான் தர்மஉபதேசனை செய்ய வேண்டுமென்று பெரிய அய்யா சொல்லியிருக்கிறாரு. அதனால் நான் தமிழை மறக்க மாட்டன். எனது நோக்கம், படித்த பின்னர் எங்க ஊரில ஒரு பன்சாலை கட்டி, அங்குள்ளவங்களுக்கு தர்மஉபதேசனை செய்யணும்.



மேனகா



சாருமதி



வசீகரன்



# சம்திங்.. சம்திங் கூட்டணி!



1-ம் பக்க தொடர்ச்சி

ஜனநாயக தமிழ்தேசிய முன்னணியென்ற பெயரில் ஒரு கூட்டணியொன்று கடந்த வாரம் அங்குரார்ப்பணம் செய்யப் பட்டுள்ளது. ஈ.பி.டி.பி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஜனநாயகப் போராளிகள் கட்சி உள்ளிட்ட சில சிறிய கட்சிகள் சில அமைப்புக்கள் இதில் பங்காளிகள்.

நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழ் மக்களின் உரிமைக்காக யாரும் குரல் எழுப்ப வில்லையென்றும், தமிழ் மக்களின் பிரச்சனைகளிற்காக குரல் எழுப்பவே ஒன்றிணைந்தோம் என்றும் அங்குரார்ப்பண நிகழ்வில் பங்காளிகள் அறிவித்துள்ளனர். அத்துடன், இப்போதைக்கு கட்சியாக ஒன்றிணைந்து செயற்பட போவதில்லை யென்றும் அறிவித்துள்ளனர்.

புதிய கூட்டணிக்கு சின்னம் உதயசூரியன். ஊடகப் பேச்சாளர் பிரபா கணேசன். தந்தை செல்வாவை போல பரந்த கூட்டணியை அமைப்பேன் என்றுள்ளார் கூட்டணி யிலுள்ள மூத்ததலைவர் ஆனந்த சங்கரி.

ஆனால் இதிலுள்ள கேள்வி என்ன வென்றால், இந்த கூட்டணியால் எதுவெல்லாம் முடியும் என்பதே. இந்த கூட்டணியிலுள்ள சில கட்சிகளின் பெயரை கேட்டாலே 'அந்தாட்டிகா கண்டத்திலுள்ள கட்சியா?' என மக்கள் மிரள்வார்கள். காரணம், முன்னப்பின்ன அந்த பெயரை அறிந்தேயிருக்கமாட்டார்கள். இப்படியான கட்சிகளின் கூட்டு என்ன மாற்றத்தை கொண்டு வரும்? எதற்கு இந்த அவசர கூட்டு? பின்னணியில் யாரும் உள்ளனரா?

இந்தக் கேள்வியை கேட்டதும், விடயமறிந்த வட்டாரங்கள் வாய்க்குள் சிரித்துக் கொண்டன. ஏதோ விடயம் உள்ளதென்பதை புரிந்து, நன்றாக விசாரித்து பார்த்தால் 'எல்லாப்பாதையும் ஹம்பாந்தோட்டை பக்கமே' செல்கிறது!

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மீண்டும் ஆட்சியை பிடிக்க நடத்தும் சதுரங்க ஆட்டத்தின் இன்னொரு காட்சியாகவும் இது இருக்கலாமென்று ஏற்கனவே சமூக வலைத்தளங்களில் விமர்சிக்கப்பட்டு கொண்டிருப்பதையும் நினைவூட்டி வைக்கி றோம்.

இதற்குமேல் இந்த விடயத்தை ஆராயாமல், அரசியலென்றால் கூட்டணிதானே. அவர்கள் கூட்டு வைத்துக் கொள்ளட்டும். ஆயிரம் பூக்கள் மலர்வதுதானே ஜனநாயகத்தின் அடிப்படை பண்பு என கூறிஞ் இப்பொழுது அந்த கூட்டணி கட்சிகளின் பயோடேட்டா, எனர்ஜி விடயங்களை பார்ப்போம்.

### ஈ.பி.டி.பி

கூட்டணிக்குள் சக்கரவர்த்தி இந்தக் கட்சிதான். ஆனால் வெளியில் மெழுகுவர்த் தியாகிக் கொண்டிருக்கும் சோகம் நடந்து கொண்டிருக்கிறது. இந்த கூட்டணியிலுள் ளவர்களில் கடந்த தேர்தலில் வெற்றிபெற்றவர் ஈ.பி.டி.பியின் டக்ளஸ் தேவானந்தாதான்.

கடந்த தேர்தலில் ஏற்பட்ட 'மெகா சறுக்கல்', ஆட்சிமாற்றத்தின் பின் கட்சிக்குள் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, சந்திரகுமார் விலகல் என அண்மைக்காலமாக கட்சிக்கு 'பொங்குசனி'தான்.

அரசியலென்றால் ஏதாவது செய்யனும். தேசிய மாநாடு, அமைச்சுப்பதவிக்கான முயற்சி என மீண்டும் ஈ.பி.டி.பி ஆரம்பித்துள்ள சில நடவடிக்கைகளின் ஒரு கட்டம்தான் இந்த கூட்டணி.

ஈ.பி.டி.பியின் வாக்குவங்கியே கரைந்து கொண்டிருப்பதை கடந்த தேர்தல்கள் வெளிப்படுத்தியுள்ளன. இப்போதைய நிலையில் கட்சி பஞ்சராகித்தான் உள்ளது.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சி முழுக்க நீடித்தது, வெற்றிலை சின்னத்தில் தேர்தலில் களமிறங்கியது போன்றவை ஈ.பி.டி.பி இலகுவில் விட்டுவிட முடியாத சம்பவங்கள். இதுதான் கட்சியின் சறுக்கலின் காரணமும். இதை மக்கள் இலகுவில் மறக்கமாட்டார்கள். 'நல்லாட்சியில் மக்களிற்காக யாரும் பேசவில்லை.

நாம்தான் பேசப்போகிறோம்' என்றால் 'வரலாறு முக்கியம் அமைச்சரே' என்பதுதான் பெரும்பாலானவர்களின் மைண்ட் வொய்ஸாக இருக்கும்!

### தமிழர்விடுதலை கூட்டணி

இந்த கூட்டணியிலுள்ள பழம்பெரும் கட்சியிது. வீ.ஆனந்தசங்கரியும் பழம்பெரும் அரசியல்வாதி. ஆனால் என்ன? 'பழம்பெரும்' என்பதற்குண்டான மரியாதை அவருக்கு கிட்டவில்லை. எல்லாவற்றிற்கும் காரணம், அவரது பேச்சுத்தான்.

திடீர்திடீரென அவர் பேசும் ஏடாகூட பேச்சு அவரை அரசிய லின் உச்சாணியி லிருந்து சறுக்கிவிழுத்தி, முகவரியில்லாத கட்சி களுடன் கூட்டணி அமைக்க வைத் துள்ளது. வாயைமூடி பேசியிருந்தால் சில சமயங்களில் இன்று எதிர்க்கட்சி தலைவ ராகவும் அவர் இருந்திருக்கலாம்.

என்னதான பழுத்த அரசியல்வாதியாக இருந்தாலும், அரசியல் என்றால் 'இடம் பார்த்து பேசுவது' என்பதை படித்திருக் காததால் தலை கீழாக விழுந்துவிட்டார். கட்சிக்கும் சொல்லிக்கொள்ளும் விதமான ஆதரவு கிடையாது. தேர்தல்களில் கட்டுக்காசு கிடைப்பதே ஆச்சரியம். தேர்தல்களில் இதற்குமேலும் கையை சுட்டுக்கொள்ள முடியாதென்ற நிலைக்கு கட்சி வந்துவிட்டது.

### ஜனநாயக மக்கள் காங்கிரஸ்

தமிழர்விடுதலை கூட்டணியின் மேல் மாகாண தம்பியென சொல்லலாம் இந்த கட்சியை. அப்படியான நிலையில்த்தான் இப்பொழுது உள்ளது. மனோ கணேசனிட மிருந்து பிரிந்து சென்று பிரபா கணேசன் அமைத்த கட்சி. பிறகு நல்லையா குமரகுரு பரனும் சென்றார். ஆரம்பத்தில் நன்றாக போவதைப்போலதெரிந்தாலும், இப்பொழுது கட்சி 'சீரியசான' கட்டத்திற்குத்தான் சென்று கொண்டிருக்கிறது. அதனால்த்தான் த.வி.கூட்டணியின் மேல்மாகாண தம்பி என்றோம்.

இந்தக்கட்சியும் முன்னர் மகிந்த ராஜபக்சவின் மடியில் உட்கார்ந்திருந்த கட்சிதான்.

### சிறிரெலோ, ஜனநாயக போராளிகள்

இந்த இரண்டு கட்சியும் உருவாக்கப்பட்ட விதம் பற்றிய நிறைய சர்ச்சைகள் உள்ளன. இரண்டு கட்சிகளிற்கும் இன்னும் மக்கள் பிரதநிதிகள் என்ற அந்தஸ்து கிட்டவில்லை.

யாழ்ப்பாண பல்கலைகழக மாணவர்கள் மீது மகிந்த அரசு கெடுபிடி பிரயோகிப்பதற்கு முதல்நாள் இரவு அந்தப்பகுதியில் அலுவலகம் திறந்து, பெற்றோல் குண்டு தாக்குதலிற்குள்ளான கட்சி சிறிரெலோ. அது தற்செயலா, திட்டமிட்டதா என்பதுதான் அப்பொழுது இணையத்தில் தீவிர ஆராய்ச்சிக்குள்ளான விடயம்.

மகிந்த அரசுடன் அந்தக்கட்சி நெருக்கமாக செயற்பட்டது. பசில் ராஜபக்சவின் நம்பிக்கைக்குரியவராக அந்த கட்சியின் தலைவர் உதயராசா இருந்தார். கட்சியமைத்த பின்னர் வவுனியா நகரசபை, வடக்கு மாகாணசபை, பாராளுமன்ற தேர்தல்களில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். கட்சிக்கென்று குறிப்பிட்ட வாக்குவங்கி கிடையாதது பெரய பலவீனம்.

ஜனநாயகப் போராளிகள் கட்சி 'தோன்றிய' விதத்தை பார்த்தபோது இராணுவப்பின்னணி இருந்ததாக அப்போது பரவலாக சந்தேகம் எழுப்பப்பட்டது. எனினும், அவர்கள் மறுத்தார்கள். போராளிகள் பொதுவெளிக்கு வந்தாலே சந்தேகக் கண்கொண்டுதான் பார்ப்பீர்களா என சென்ரிமென்ராக பேசி வாக்கு கேட்டார்கள்.

> **ஈழவிடுதலை அமைப்பு, தமிழ் மக்கள் அமைப்பு, ஈழமக்கள் புரட்சிகர முன்னணி, ஜனநாயக மறுசீரமைப்பு இயக்கம் உள்ளிட்ட ஏனைய சில அமைப்புக்களும் உள்ளன. இந்த அமைப்புக்களின் பெயர்களை பலரும் அறிந்தேயிருக்கமாட்டார்கள். கூட்டணி விவகாரத்தால் செய்திகளில் இடம்பிடித்து விட்டார்கள்.**

ஆனால் விடுதலைப்புலிகளின் பாடல்களை பகிரங்கமாக ஒலிபரப்பி வாக்கு கேட்டபோதுதான், 'எல்லாத்தையும் மறைத்தீர்கள். மண்டைமேல இருந்த கொண்டையை மறைக்க மறந்திட்டீங்களே பாஸ்' என மக்கள் பகிரங்கமாக கொமண்ட் அடித்தார்கள். இவர்களிற்கும் வாக்கு வங்கி கிடையாது.

### நாங்களும் இருக்கிறம்!

ஈழவிடுதலை அமைப்பு, தமிழ் மக்கள் அமைப்பு, ஈழமக்கள் புரட்சிகர முன்னணி, ஜனநாயக மறுசீரமைப்பு இயக்கம் உள்ளிட்ட ஏனைய சில அமைப்புக்களும் உள்ளன. இந்த அமைப்புக்களின் பெயர்களை பலரும் அறிந்தேயிருக்கமாட்டார்கள். கூட்டணி விவகாரத்தால் செய்திகளில் இடம்பிடித்து விட்டார்கள்.

மக்கள் மத்தியில் அபிமானம்மிக்க வர்களாக மாற முடியாததுதான் இந்தகட்சி களின் பலவீனம். கூட்டணி செய்தி வெளி யானதும், 'லெற்றர் பாட்' கட்சிகள் என இணையவாசிகள் இந்தகட்சிகளை கிண்ட லடித்தார்கள். இந்தக்கட்சிகளால் கூட்ட ணிக்கு லாபமா, கூட்டணியால் இந்தக்கட்சி களிற்கு லாபமா என்று கலாய்த்தவர்களும் உள்ளனர்.

நாடியா
nadiyanice@yahoo.com





# மாகாணசபை சில தீர்மானங்களை தவிர்த்திருக்கலாம்

## மனம்திறக்கிறார் சீ.வி.கே.சிவஞானம்

செல்வம்
selvam@deepam.lk

வடமாகாணசபை அமைந்து இரண்டு வருடம் கடந்துவிட்டது. இதுவரையான பயணத்தை திரும்பிப்பார்க்க எப்படி உணர்கிறீர்கள் என அவைத்தலைவர் சீ.வி.கே. சிவஞானத்தை சந்தித்து கேட்டோம். பல்வெறு விடயங்களையும் அவர் மனம்திறந்து பேசிய நேர்காணல் இது.

***தீபம்: வடமாகாணசபை பதவியேற்று இரண்டு வருடங்கள் கடந்து விட்டது. என்ன நடக்கிறது மாகாணசபையில்?***

***சீ.வி.கே.சிவஞானம்:*** சாதாரண நிர்வாகம் தான் செய்கிறோம். பெரிய அளவில் மாற்றிய தாக சொல்லமுடியாது. சாதித்ததாகவும் சொல்ல முடியாது. சில நிர்வாக நடவடிக் கைகள் நாங்கள் இல்லாதபோதும் நடை பெற்றுள்ளது. அதில பெரிய மாற்றங்களை செய்யதாக பொய் கூற முடியாது. அதிகாரம் இல்லை என்பதுஉண்மை. ஆனால் இருக்கிற அதிகாரங்களை வைத்து நாங்கள் நிறையச் செய்யலாம் என்பது என்னுடைய கருத்து. அதிகாரத்தை உருவாக்கிக் கொள்வது அதனை நடைமுறைப்படுத்துவது எமது திறமை. நான் மாநகர ஆணையாளராக இருந்த போது அதிகாரம் இல்லை என்று நான் இருக்கவில்லை. நிறையச் செய்திருக்கின்றேன். அதற்கு எனக்குள்ளே வீதரியம் வேண்டும். துணிச்சல் வேண்டும். இந்த ஆற்றல் இருந்தால் நாங்கள் செய்யலாம்.

***தீபம்: எல்லோரும் ஒற்றுமையாக இருந் தால் 2016 தமிழர்களுக்கு ஒரு தீர்வு கிடைக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவித் துள்ளார். இதில் நாங்கள் ஒருஒற்றுமை என்பதில் என்னபங்களிப்பு இருக்கிறது ?***

***சீ.வி.கே.சிவஞானம்:*** ஒற்றுமை என்பது இரண்டு விதமாக இருக்க வேண்டும். ஒன்று முஸ்லிம் மக்களை நாங்கள் இணைக்க வேண்டும். முஸ்லிம்களும் தமிழ்மக்கள் என்ற வகையில் தீர்வை பெறுவதற்கு அவர் களுடனான ஒற்றுமை அவசியம். மற்றது தமிழ் மக்களிற்கிடையிலான ஒற்றுமை. நாம் போட்டிபோட்டுக் கொண்டிருந்தால் தெற்கு அரசியல்வாதிகளுக்கு வாய்ப்பாகிவிடும். தமிழ் மக்கள் பேரவை என்ற ஒன்று உருவாகி யிருக்கிறது. யாராவது பேசுகிறார்களா? விமர்ச்சிக்கிறார்களோ?. அல்லது அவரைப் பிடி இவரைப்பிடி என்று வழக்கு வைக்கினமோ. இல்லை. அவர்கள் என்னவும் செய்யலாம் என்னவும் சொல்லலாம். ஆனால் நாங்கள் யதார்த்தத்தை உணர்ந்துதான் செயற்படலாம். இலக்கை பற்றிய தெளிவு தேவை. எமது பயணத்தில் எல்லா தரப்பி னரின் ஒத்துழைப்பும் அவசியம்.

***தீபம்: மாகாணசபை உறுப்பினர்களுக் குள்ளேயே பல பிரச்சினைகள் இருக்கிறது. இந்த குத்துவெட்டில் வாக்களித்த மக்களை யாரும் கவனிப்பதாக தெரியவில் லையே?***

***சீ.வி.கே.சிவஞானம்:*** எனக்கும் உந்தக் கருத்து உள்ளது. நாங்கள் அனுபவம் வாய்ந்த உறுப்பினர்கள் அல்ல. நாங்கள் புதுச்சபை. மற்றது நான்கு கட்சிகளின் கூட்டு. ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த பிரதேசங்களின் பிரதிபலிப்பு உண்டு. இதனால் வேறுபாடு இருக்கத்தான் செய்யும். ஆனாலும் சபை யில் ஒரு முரண்பாடு வந்தாலும் அதை வாக்கெடுப்பிற்கு கொண்டு செல்ல நான் அனுமதிப்பதில்லை. நாங்கள் எங்களுடைய செயற்பாடுகளை அங்கத்தவர்களோடு பகிர்ந்து கொள்வதில் தான் பின்னடைவு இருக்கிறது என்று நான் நினைக்கிறன்.

***தீபம்: வடமாகாணசபையில் அமோக மாக தீர்மானங்கள் மட்டுமே நிறை வேற்றப்பட்டுகொண்டிருக்கிறதே. இவற்றில் எத்தனைக்கு தீர்வு கிட்டியுள்ளது?***

***சீ.வி.கே.சிவஞானம்:*** தீர்மானங்களில் மூன்றுவகை உண்டு. பல தீர்மானங்கள் மக்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்தும் தீர்மானங்கள். சம்பந்தப்பட்டவர்களிடம் தீர்மானங்களை அனுப்பும்போது அதற்கு பதில் வரவில்லை என்பதற்காக தீர்மானங் களை அனுப்பாமல் இருக்கவில்லை. ஒவ்வொரு தீர்மானத்திற்கும் நடவடிக் கையை எதிர்பார்க்க முடியாது. அதில் 25 தீர்மானங்களை தவிர்த்திருக்கலாம் என்பது என்னுடைய கருத்து. மக்களு டைய அன்றாடதேவை, அரசியல்தேவை இவைகளைதானே நாங்கள் தீர்மானமாக்கு கிறோம். தீர்மானங்களில் எவர் சம்பந்தப்படு கிறார்களோ அவர்களுக்கு அனுப்பி வைக்கி றோம். சில தீர்மானங்களுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே தீர்மானங்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளன என்று சொல்ல முடியாது.

***தீபம்: வடக்கிலுள்ள வேலைவாய்ப் பின்மைக்கு வடமாகாணசபையினால் தீர்வுகாண முடியவில்லையே?***

***சீ.வி.கே.சிவஞானம்:*** இருக்கின்ற வெற்றிடங்களை நிரப்பச் சொல்லித்தான் நாங்கள் கூறிவருகின்றோம். ஆனால் வேலை வாய்ப்பை உருவாக்கக்கூடிய அளவிற்கான வாய்ப்புகள் எங்களுக்கு என்னும் சரி யாகக் கிடைக்கவில்லை. எங்களுடைய நிதியைப் பொறுத்தவரையில் மத்திய அரசாங் கத்தினுடைய நிதி உதவியை நம்பித்தான் இந்த மாகாணசபை இருக்கிறது. மாகாணம் சார்ந்த நிதிவளம் எங்களிடம் இல்லை. நாங்கள் ஒரு கைத்தொழிலை உருவாக்கும் வளமும் எங்களிடம் இல்லை. இது ஒரு சிக்கலான பிரச்சினைதான்.

HONDA மோட்டார் சைக்கிள் நிறுவனத்தினால் மற்றும் HERO மோட்டார் சைக்கிள் நிறுவனத்தினால்
அங்கிகரிக்கப்பட்ட உதிரிபாகங்களுடன் மற்றும் அனைத்து உதிரிப்பாகங்களையும் ஒரே கூரையில் பெற்றிட...

கைதடி மண்ணில் புதியதோர் உதயம்...


S.JANA TRADERS

ஏ9 வீதி, கைதடிச் சந்தி, கைதடி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)
Tel
077 248 7772










# எம்.ஜி.ஆரின் எம்.கே.டி அன்பு

தொகுப்பு: ஸ்ரீதர் சுவாமிநாதன்

**எம்.ஜி.ஆர்** பிரபலமாவதற்கு முன் தமிழ் திரையுலகில் கொடிகட்டிப் பறந்தவர் எம்.கே. தியாகராஜ பாகவதர். அவர் நடித்த 'ஹரிதாஸ்' திரைப்படம் சென்னை பிராட்வே திரையரங்கில் 3 தீபாவளிகளைக் கண்டது. எம்.ஜி.ஆர். மீது பேரன்பு கொண்டவர். எம்.ஜி.ஆருக்கும் அவர் மீது மதிப்பும் மரியாதையும் அன்பும் உண்டு. தியாகராஜ பாகவதரின் தலை அலங்காரத்துக்கு 'பாகவதர் கிராப்' என்றே பெயர். அவரைப் போலவே எம்.ஜி.ஆரும் ஆரம்ப காலங்களில் 'பாகவதர் கிராப்' வைத்துக் கொண்டிருந்தார்.

'அசோக் குமார்' படத்தின் கதாநாயகன் தியாகராஜ பாகவதர். அந்தப் படத்தில் தளபதி வேடத்தில் எம்.ஜி.ஆர். நடித்திருந்தார். அந்த வாய்ப்பை எம்.ஜி.ஆருக்கு வாங்கிக் கொடுத்தது பாகவதர்தான். படத்தின் ஒரு காட்சியில் அரசனின் உத்தரவுப்படி தியாகராஜ பாகவதரின் கண்களைத் தளபதியாக நடிக்கும் எம்.ஜி.ஆர். பழுக்கக் காய்ச்சிய கம்பியால் குத்தி குருடாக்க வேண்டும். இயக்குநர் ராஜா சந்திரசேகர் படமாக்கிக் கொண்டிருந்தார். கேமரா ஓடுகிறது.

கம்பியைக் கையில் பிடித்தபடி பாகவதரை நெருங்கிய எம்.ஜி.ஆர். அப்படியே தயங்கி நின்றுவிட்டார். 'கட்' சொன்ன இயக்குநர், காரணம் கேட்டார். நடிப்புதான் என்றாலும் கூட, தான் அன்பும் மதிப்பும் வைத்திருக்கும் பாகவதரின் கண்களைக் குருடாக்குவது போல நடிக்க எம்.ஜி.ஆரின் மனம் இடம் தரவில்லை. கலங்கிய கண்களுடன் அப்படியே நின்று விட்டார்.

விஷயம் அறிந்து இயக்குநர் மட்டுமின்றி தியாகராஜ பாகவதரே எவ்வளவோ சமாதானம் சொல்லியும் எம்.ஜி.ஆர். அப்படி நடிக்க மறுத்துவிட்டார். பிறகு, கையில் கம்பியுடன் பாகவதரை எம்.ஜி.ஆர். நெருங்கும் போது, நிரபராதியான தனக்கு தண்டனை வழங்கப்படுவதால் ஆவேசமடைந்த பாகவதர், அந்த கம்பியை எம்.ஜி.ஆரின் கைகளில் இருந்து பிடுங்கி தானே தனது கண்களை குத்தி குருடாக்கிக் கொள்வது போல காட்சி மாற்றப்பட்டது. அதற்கேற்ப, பாகவதர் தன் கண்களை தானே குத்திக் கொள்வது போல காட்சி படமாக்கப்பட்டது. அப்படியும் அந்தக் காட்சிக்கான படப்பிடிப்பு முடிந்த பின்பும் எம்.ஜி.ஆரால் அழுகையை அடக்க முடியவில்லை. அவரைக் கட்டியணைத்து சமாதானப்படுத்தினாராம் பாகவதர். அந்த அளவுக்கு பாகவதர் மீது அன்பு செலுத்தியவர் எம்.ஜி.ஆர்.

திரையுலகில் புகழ்கொடி நாட்டிய தியாகராஜ பாகவதர், லட்சுமிகாந்தன் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டார். வழக்கில் இருந்து மீண்டாலும் கூட சிறை வாழ்க்கை அவரை பற்றற்ற ஞானி போல மாற்றியிருந்தது. பின்னர், அவர் நடித்த சில படங்களும் பெரிய வெற்றியைப் பெறவில்லை. அவரும் படங்களில் நடிப்பதில் ஆர்வமின்றி இருந்தார். கடன்கள் காரணமாக திருச்சியில் அவர் கட்டிய பிரம்மாண்டமான மாளிகை ஏலத்துக்கு வந்தது. அதை மீட்டு பாகவதரிடமே கொடுத்தார் எம்.ஜி.ஆர். வெளியே தெரியாமல் பாகவதருக்கு எம்.ஜி.ஆர். செய்த உதவி இது.

காலங்கள் மாறின. பாகவதர் மறைவுக்குப் பிறகு அவரது குடும்பத்தினர் எங்கிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. பல ஆண்டுகள் கழித்து எம்.ஜி.ஆர். முதல்வராகவும் ஆகிவிட்டார். பாகவதரின் குடும்பம் வறுமையில் வாடுவது குறித்தும் சென்னையில் அவர்கள் வசிப்பது பற்றியும் ஒருநாள் முதல்வர் எம்.ஜி.ஆருக்கு தெரிய வந்தது.

அந்த நேரத்தில் தியாகராஜ பாகவதர் வாழ்ந்த அதே திருச்சியில் அரசு சார்பில் கலையரங்கம் கட்டப்பட்டது. அதன் திறப்பு விழாவுக்கு முதல்வர் எம்.ஜி.ஆர். செல்கிறார். விழாவுக்கு தியாகராஜ பாகவதர் குடும்பத்தை அழைத்து வருமாறு எம்.ஜி.ஆர். கூறினார்.

விழாவன்று மேடையில் பாகவதரின் குடும்பத்தாருக்கு அதிமுக கட்சியின் சார்பில் எம்.ஜி.ஆர். பண முடிப்பு வழங்கினார். அதோடு, அவர்களே எதிர்பாராத வகையில் காலம்தோறும் பாகவதர் பெயர் நிலைக்கும் வகையில், அரசு சார்பில் கட்டப்பட்ட கலையரங்கத்துக்கு தியாகராஜ பாகவதர் மன்றம் என்றும் எம்.ஜி.ஆர். பெயர் சூட்டினார்.

பாகவதரின் குடும்பத்தாருக்கு ஆனந்தக் கண்ணீர். பாகவதரின் மீதும் அவரது குடும்பத்தார் மீதும் எம்.ஜி.ஆர். வைத்திருந்த அன்புக்கும் அவரது பரந்த மனத்துக்கும் இது உதாரணம். விழாவில் ஒரு சுவையான சம்பவம். காலையில் விழா நடந்தது. முதல்வர் எம்.ஜி.ஆர். வருகையை எதிர்பார்த்து திருச்சி நகரமே அந்தப் பகுதியில் கூடியிருந்தது. 11.30 மணிக்கு விழா மேடைக்கு எம்.ஜி.ஆர். வருகிறார். மலர்ந்த முகத்துடன் மக்களைப் பார்த்து கும்பிட்டார். அப்போது, பொருத்தமாக 'சிவகவி' படத்தில் இடம் பெற்ற 'வதனமே சந்திர பிம்பமோ? மலர்ந்த சரோஜமோ?' பாடல் பாகவதரின் கம்பீரக் குரலில் ஒலிப் பெருக்கியில் ஒலிக்கிறது. புரிந்து கொண்ட மக்களின் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டது.

மக்கள் கடலின் வரவேற்பை கையசைத்து ஏற்றுக் கொண்டே தனக்கு பிடித்த பாகவதரின் பாடலைக் கேட்ட எம்.ஜி.ஆரின் முகம் சந்திர பிம்பமாய், மலர்ந்த ரோஜாவாய் மேலும் மகிழ்ச்சியில் ஜொலித்தது. மக்களின் உற்சாக ஆரவாரத்துக்குக் கேட்க வேண்டுமா என்ன?

திரையுலகில் புகழ் பெற்றிருந்த தியாகராஜ பாகவதர், அவரது போட்டியாளர் பி.யூ.சின்னப்பா ஆகியோருக்கு பிறகு வந்த கதாநாயகர்களில் இருவரோடும் இணைந்து நடித்தவர் என்ற பெருமை எம்.ஜி.ஆருக்கு உண்டு. பாகவதருடன் 'அசோக்குமார்', 'ராஜ முக்தி' ஆகிய படங்களிலும் பி.யூ.சின்னப்பாவுடன் 'ரத்னகுமார்' படத்திலும் எம்.ஜி.ஆர். நடித்துள்ளார்.

1980ம் ஆண்டு பெப்ரவரி 17ம் தேதி எம்.ஜி.ஆர். அரசு டிஸ்மிஸ் செய்யப்பட்டது. அன்று ஞாயிற்றுக்கிழமை. செய்தி அவருக்கு கிடைத்த நேரத்தில் சென்னைத் தொலைக்காட்சியில் தியாகராஜ பாகவதர் நடித்த 'சிவகவி' படம் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. அரசு டிஸ்மிஸ் ஆன தகவல் தெரிந்தும் கவலைப்படாமல் படத்தை எம்.ஜி.ஆர் ரசித்து பார்த்தார். அவருக்கு மக்கள் மீது அவ்வளவு நம்பிக்கை. அந்த நம்பிக்கையின்படியே மக்கள் அவரை மீண்டும் முதல்வராக்கினர்.

(தொடரும்)

---

### 5-ம் பக்க தொடர்ச்சி

சுகதேகியாக இருப்பதுடன் நன்றாக படித்து, மும்மொழியிலும் நல்ல தேர்ச்சிபெற்றவனாக மாறிவிட்டான் என சகோதரிகள் மகிழ்ச்சியுடன் சொன்னார்கள்.

**கொக்கலிய ஜினாலங்கார**

புத்தளம் குருஞ்சம்பிட்டி விகாரையில் பௌத்தத்தை தழுவிய அடுத்த சிறுவனும் வவுனியாவாசிதான். பதின்னான்கு வயதான தனுசிகன்தான் இப்பொழுது கொக்கலிய ஜினாலங்கார என மாறியுள்ளான்.

கண்ணன்கோட்டம் பகுதியை சேர்ந்த கனகராஜா நாகராணிக்கு எட்டு பிள்ளைகள். வாழ்க்கைசுமையை சுமக்க சிரமப்பட்ட குடும்பம். பிள்ளைகளில் மூவர் திருமணம் முடித்து சென்றுவிட, ஐந்து பிள்ளைகள் வீட்டிலிருந்தனர்.

குடும்பசுமையை சமாளிக்க தாய் நாகராணி எடுத்த முடிவு சவுதி அரேபியாவிற்கு வீட்டுப் பணிப்பெண்ணாக சென்றார். பிள்ளைகள் ஐவரையும் நாகராணியின் தாயார் கவனித்துக் கொண்டார். நாகராணி வெளிநாடு சென்ற பின்னர் கணவன் கனகராஜாவும் வீட்டை விட்டு வெளியேறினார். அவர் எங்கே இருக்கிறார் என்பது குடும்பத்தினருக்கு தெரியாது.


சிறுவயது தனுசிகன்

அப்பம் சுட்டு விற்று பேரப்பிள்ளைகள் ஐவரையும் நாகராணியின் தாயார். அந்த பிள்ளைகளிலேயே தனுசிகன்தான் குழப்படியாம். திருமணமான சகோதரர் வீடு, அம்மம்மாவீடு என மாறிமாறி நின்றான். அவனை படிப்பிப்பதற்காக தமக்கு அறிமுகமான மேனகாவின் துணையுடன் பௌத்த பிக்கு ஒருவரிடம் ஒப்படைத்தார்கள். இதுதான் கனகராஜா தனுசிகன், கொக்கலிய ஜினாலங்காரவாக மாறிய கதை.

"பேரன் இங்கு இருக்கும் போது கொஞ்சம் குழப்படி.. அவனுடைய சகோதரர்கள்தான் அவனை படிப்பதற்காக பௌத்த பிக்கு ஒருவரிடம் ஒப்படைத்தனர். இப்பொழுது அவன் நன்றாக படித்து நல்ல படியாக இருக்கிறான். மகள் வெளிநாட்டுக்கு போனதால் பிள்ளைகளை நான் தான் பார்க்கிறேன். புத்தள விகாரையில் இருக்கும் பேரனை நான் போய் பார்ப்பதில்லை. அவனுடைய அண்ணன்தான் போய் பார்க்கிறான். தற்போது அவன் பௌத்த பிக்குகளுடைய காவி உடை தரித்து படிக்கின்றான். நாங்கள் படிக்கிறதுக்காகதான் விட்டம். இப்பொழுது அவனுடைய விருப்பப்படி பிக்குவாக வர படிப்பதாக சொன்னார்கள். நாங்கள் கிறிஸ்தவ சமயம். அவன் அப்படி போறது எனக்கு விருப்பம் இல்லைதான். ஆனால் அவன் விரும்பி செய்யிறான். பேரன் நல்லா இருந்தால் சரி" என்றார் அம்மம்மா சாருமதி.

புத்தளம் குருஞ்சம்பிட்டி விகாரைக்கு சென்று தனுசிகனை பார்த்துவருவது அண்ணன் வசீகரன்தான். அவரிடம் பேசினோம். "தம்பியை நான் தான் போய் பார்க்கிறனான். வீட்டில் இருந்ததை விட அவன் தற்போது நன்றாகவும் சந்தோசமாகவும் இருக்கின்றான். நல்லா படிக்கின்றான். அவன் 22 வயதில் தான் வரமுடியும் என அங்குள்ள பெரிய சாது சொன்னார். அவன் இங்கு வந்து எங்களுடன் இருக்கணும் என்றதுதான் எனது ஆசை. ஆனால் அவன் காவி உடை தரித்து பிக்குவாக வந்தால் எம்முடன் இருக்க முடியாது. இனி அந்த உடையை கழற்ற முடியுமோ தெரியாது. ஏதோ தம்பி சந்தோசமாக இருந்தால் சரி" என்றார்.

குடும்ப வறுமை காரணமாக பௌத்த பிக்குவிடம் ஒப்படைக்கப்பட்டு அந்த சிறுவர்களின் விருப்பதுடன் அவர்கள் பிக்குவாக கற்று வருகின்றனர். புத்தளம் பகுதியில் உள்ள விகாரையில் பெந்திவெள தியசேன தேரர் அவர்களின் வழிகாட்டலில் கற்கும் குறித்த இரு தமிழ் சிறுவர்களுடனும் தொலைபேசியில் பேசினோம்.

சுயவிருப்பத்தினடிப்படையில் பௌத்த பிக்குவாக மாற விரும்பியதாக சொன்னார்கள். தற்போதைய வாழ்க்கை தமக்கு பிடித்துப் போய்விட்டதாகவும் சொன்னார்கள். இரண்டு வருடங்கள் சிங்கள பகுதியில் வாழ்ந்ததாலோ என்னவோ தமிழில் பேச சிரப்பட்டார்கள். தமிழ் உச்சரிப்புக்களில் கணிசமான மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன.

நேருஜி

# எக்ஸாம் என்ரரெயின்ற்மென்ற்


பிரதா கந்தப்பு


திவ்யா

கோகுலன்

தீபத்தின் இந்தவார எக்ஸாம் என்ரரெயின்ற்மென்றிற்காக நாம் வளைத்துப்பிடித்தவர்கள் இசையமைப் பாளர் கந்தப்பு ஜெயந்தன், பாடகி பிரதா கந்தப்பு, நடிகை திவ்யா, ஆகியோர்.

எக்ஸாம் என்ரரெயின்ற்மென்ற் என்றதும் நால்வரும் வெலவெலத்து எஸ்கேப் ஆகும் வழியைத்தான் பார்த்தனர். இதற்கெல்லாம் எஸ் ஆனால் எப்படி என அவர்களை சமாளித்து கலந்துகொள்ள வைத்தோம்.

'பொலிற்றிக்கலில நான் ரொம்ப வீக். பார்த்து கேளுங்க' என தயாரானார் குறும்பட நடிகை திவ்யா. 'நாங்களெல்லாம் அப்பவே அப்பிடி. விட்ருவமா' என தம்ஸ் கட்டி தயாரானார் இசையமைப்பாளர் கந்தப்பு ஜெயந்தன். 'பார்த்து கேளுங்க. மானத்தை வாங்கிடக்கூடாது' என ஒரு டீலடன் பதில் சொல்ல தயாரானார் பாடகி பிரதா கந்தப்பு.

**கேள்வி: புளொட் அமைப்பின் தலைவர் யார்**
**பதில்: சித்தார்த்தன்**

***பிரதா கந்தப்பு:*** *அது வந்து... வந்து... தெரியாது.*

***திவ்யா:*** *ஐயையோ பொலிற்றிக்ஸா?... சத்தியமா தெரியாது.*

***கந்தப்பு ஜெயந்தன்:*** *தர்மலிங்கம் சித்தார்த்தன். நான் ஒன்று பாஸாயிட்டன். இப்பிடியே சிம்பிளான கேள்விகளாக கேளுங்கள்.*

***தேவி பரமலிங்கம்:*** *நன்றாக தெரியும் சித்தார்த்தன்.*

**கேள்வி: யாழ்ப்பாணத்தில் பறவைகள் சரணாலயம் அமைக்க திட்டமிட்டு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள பிரதேசம் எது?**
பதில்: வடமராட்சி கிழக்கு

***பிரதா கந்தப்பு:*** *(கையை பிசைகிறார்) நெடுந்தீவா? (விடையை சொன்னதும், அடடா அங்கு பறவைள் சரணாலயம் அமைக்கப்போகிறார்களா என ஆர்வமாக கேட்டார்)*

***திவ்யா:*** *ம்ம்... சரியாத் தெரியலையே... கோண்டாவிலா?*

***கந்தப்பு ஜெயந்தன்:*** *பறவைகள் சரணாலயம்... பறவைகள் சரணாலயம்... (பெருமூச்சுடன்) தெரியவில்லையே.*

***தேவி பரமலிங்கம்:*** *அப்படியொரு சங்கதி நடக்குதா... நான் அறியவில்லையே.*

**கேள்வி: வடக்கில் உள்ள பிரபல்யமான கிருஸ்தவ யாத்திரைத்தலம் எது**
**பதில்: மருதமடு ஆலயம்**

***பிரதா கந்தப்பு:*** *மடு மாதா. அப்பாடா... ஒன்று பாஸாகிட்டன். இப்பிடி பக்கத்து ஊர்களை பற்றி கேட்டால் டக்டக்கென சொல்லுவன்.*

***திவ்யா:*** *நான் கோயிலுக்கே போகாத பார்ட்டி. ஆனாலும் தெரியும். மடுமாதாவா? (விடை சரியென்றதும், நெஞ்சில் கைவைத்து, ஒரு பாஸ் என சிரித்தார்)*

***கந்தப்பு ஜெயந்தன்:*** *மடுமாதா*

***தேவி பரமலிங்கம்:*** *மருதமடு*

**கேள்வி: வடமாகாணசபையின் பறவை எது?**
பதில்: புலுனி

***பிரதா கந்தப்பு:*** *வட மாகாண சபையின் பறவை வந்து... அன்னம்.*

***திவ்யா:*** *அன்னம்*

***கந்தப்பு ஜெயந்தன்:*** *பறவை... டக்கெண்டு கேட்டா என்னன்டு சொல்றது. நான் சரியா சொன்னதாக நீங்களே போட்டுவிடுங்க பாஸ்..*

***தேவி பரமலிங்கம்:*** *இதுவும் தெரியாதேயப்பா... ஒவ்வொரு நாளும் பேப்பர் படிக்கிற எனக்கு இது தெரியாமல் போயிற்றே.*


கந்தப்பு ஜெயந்தன்


தேவி பரமலிங்கம்



சண்டே ரைம்ஸ் மற்றும் சி.ஏ.எப் நிறுவனமும் இணைந்து , பிரித்தானிய செல்வந்தர்களில் எவர் தமது பணத்தை பதுக்கிவைக்காமல் , அதனை ஏழை எளிய மக்களுக்கு செலவுசெய்கிறார்கள் என்ற பட்டியலை வெளியிட்டுள்ளார்கள். அதில் 13 வது இடத்தைப் பிடித்திருக்கிறார் ஈழத் தமிழரான சுபாஷ்கரன் அல்லிராஜா .


தீபம்
வார இதழ்
விளம்பர தொடர்புக்கு
sales@deepam.lk ☎ 0768255567

தரமான உள்ளூர், வெளியூர் உற்பத்திகளுடன் ஆண், பெண் இருபாலாருக்கும் நவீன டிசைன்களில் காலணிகள் மற்றும் பாடசாலை சிறுவர்களுக்கான புத்தகப் பைகள் எம்மிடம் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே ஒரு இடம்...
நியூ நித்தியா சூ பலஸ்

இல. 115. கண்டி வீதி. சாவகச்சேரி.

சேவை
சகல விதமான Washing Machine களும் உங்கள் வீட்டுக்கே வந்து சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்
ஓம் சக்தி
எலக்ட்ரோனிக்ஸ்
கே.கே.எஸ் வீதி, மல்லாகம்.


தொலைபேசி : 077 8000 748 / 071 8000 748

ராஜா ஆஞ்சநேயர்
சர்வதேச திருமண சேவை

ஜாதகப் பொருத்தம் பார்த்துக் கொடுக்கப்படும்
எம்மிடம் வெளிநாட்டு, உள்நாட்டு மணமகன், மணமகள் குறிப்புக்கள் பெற்றுக் கொள்ளலாம்...
கே.கே.எஸ். வீதி, சந்தி உள் புறம், மல்லாகம்.
தொலைபேசி :
077 247 8257 / 021 720 16557



# குழந்தைப் போராளி

## திருமுழுக்கு

குழந்தைப் போராளி 11

சைனா கெய்ரெற்சி
தமிழில்: தேவா

காலஓட்டத்தில் எனது நான்கு ஆடுகளும் குட்டிகள் போட்டு, மீண்டும் குட்டிகள் போட்டு எல்லாமாகப் பன்னிரெண்டு ஆடுகளுக்கு நான் சொந்தக்காரியானேன். எனது திருமுழுக்கு விழாவிற்காகக் குடும்பம் முழுவதும் பண்ணையில் கூடியிருந்தனர். கடைசியாக அந்த நாளும் வந்தது. விடிகாலையிலேயே எழுந்த நான், அப்பா பண்ணையாள் பையோமாவிற்கு இரண்டு ஆடுகளை வெட்டும்படி சொல்வதைக் கேட்டேன். என் ஆடுகள்! எனது ஆடுகளில் இரண்டுடன் அப்பாவும் பையோமாவும் மரத்தடிக்கு அவற்றை வெட்டுவதற்காகப் போவதைப் பார்த்தேன். நான் என்ன சொன்னாலும் செய்தாலும் இதனைத் தடுத்துவிட முடியாது. கையலாகத்தனத்துடன் அதைப் பார்த்துக்கொண்டு நின்றேன். பையோமா ஆடுகளின் கால்களைச் சேர்த்துக் கட்டுவதைப் பார்த்து என் கண்களில் கண்ணீர் பெருகத் தொடங்கியது.

'ஞானத்'தாயும் தந்தையும் எனக்காகக் காத்திருந்தார்கள். நானும் பாட்டியும் தேவாலயத்துக்குச் செல்லும்போது கூட என்னால் அமைதி பெற முடியவில்லை. எருபேட் சுவாமிக்காக நாங்கள் காத்திருந்தபோது தேவாலயத்தில் ஒலித்த அமுங்கலான இசை என்னை இன்னும் கவலை கொள்ள வைத்தது. பீடத்திற்குக் குருவானவர் செல்ல எல்லோரும் எழுந்து நின்றனர். எனது புதிய பெயர் அழைக்கப்படும்வரை எனக்கு அங்கு நிகழ்ந்த ஒன்றுமே ஞாபகமில்லை. ஒன்று மட்டும் நினைவிருக்கிறது. அது, எனது பெயர் அழைக்கப்பட பாட்டி என்னைச் சற்றே நெட்டித் தள்ளிவிட நானும் முடுக்கிவிட்டது போல் பீடத்திற்குச் சென்றது.

நான் திரும்பி வந்ததும் எனது 'ஞான'த்தாய் என்னை கட்டிய ணைத்து 'நான் ஏன் கவலையாக இருக்கிறேன்?' எனக் கேட்டார். நான் சரியாக நினவுபடுத்திப் பார்க்கும்போது தேவாலயத்தில் நான் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. சிறிது நேரத்தின் பின்பு தேவாலயத்திலிருந்து மெதுவாக நழுவி வழிபாடு முடிவடைவதற்கு முன்னமே வெளியே வந்தேன். இப்போதைக்கு வீட்டுக்குத் திரும்புவதில்லை என்ற முடிவை எடுத்துக்கொண்டேன். வாழைத்தோட்டத்தில்ஒழிந்துக்கொள்ள எனக்குஓர் இடமிருந்தது. அங்கே நிறைய வாழைப்பழங்களுடன் போய் ஒழிந்துகொண்டேன். எந்த நிலையிலும் நான் வீடு திரும்புவதாக இல்லை. அங்கு சென்றால் எனது நன்பனான ஆடுகளில் ஒன்றைச் சாப்பிட நான் நிர்பந்திக்கப்படுவேன். அப்பாவிற்கும் பையோமாவிற்கும் என்ன தண்டனை தரலாமென யோசித்தேன். நான் திடீரெனக் காணாமற் போய்விட்டால் பொலிசார் வந்து அவர்களைக் கைது செய்வார்களா? அப்படியாயின் நன்றாகத்தானிருக்கும். ஆனால் நான் திடீரெனக் காற்றில் கரைந்து போய்விட முடியாதே! எனவே வீடு செல்லத்தான் வேண்டும். இப்போது நான் ஒரு கதை தயார் பண்ணிக் கொண்டு சிங்கத்தின் குகைக்கு மீண்டும் திரும்பிச் செல்ல வேண்டும்.

நான் எனது அறைக்கு வருவதைப் பாட்டி, அம்மா, அப்பா மூவரும் பார்த்தனர். அப்பா எழுந்து நின்று என்னைப் பார்த்துத் தலையாட்டினார். என் காதில் பிடித்திழுத்து எல்லோரும் என்னைத் தேடியதாகச் சத்தமாகத் திட்டினார். அறையிலிருந்து வெளியே இழுத்து வந்து வேகத்துடன் அடிக்கத் தொடங்கினார். பாட்டியும் அம்மாவும் ஜன்னலினூடாகப் பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்ததுமே நான் எனது கண்ணீரை அடக்கிக் கொண்டேன். இந்த அடி, உதைகள் என்னை நோகச் செய்யுமென்று அவர்கள் நம்பி விடக்கூடாது. ஆனால் எனது மௌனம் அப்பாவை மேலும் வெறி கொள்ள வைத்தது என்பதை நான் புரிந்துகொள்ளவில்லை. அவரின் கைகள் ஓய்ந்த பின்னர் நான் தோட்டத்திற்குச் சென்று என் கண்ணீரைத் தங்குதடையின்றி வழியவிட்டேன்.

நான் நித்திரை கலைந்து எழுந்தபோது என்னைச் சுற்றி இருள் கவிழ்ந்திருந்தது. நான் எங்கிருக்கிறேன் என்றே எனக்குப் புரியவில்லை. அதை இரவின் குளிர் காற்று எனக்குப் புரிய வைத்தது. ஆச்சரியத்துடன் இரவின் ஒலிகளைக் கேட்டேன். தவளைகள் கத்திக்கொண்டிருந்தன. ஓநாய்களின் ஊளையும் கேட்டுக்கொண்டிருந்தது. இருளில் எனக்குப் பயமாகத்தான் இருந்தது. ஆனால் வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டுவதை நினக்கையில் அந்தப் பயம் ஒன்றுமேயில்லாது போய்விடும். சிறிது நேரம் மாறி மாறி யோசித்த பின்னர் ஆடுகளுடன் படுத்துக் கொள்வதென முடிவெடுத்தேன். ஆடுகளின் வீச்சம் பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால் அவை என்னை மிதித்துவிடலாம் என்பதுதான் சிறிது கவலையூட்டியது. ஆனால் ஆடுகள் தங்கள் கொட்டிலில் அமைதியாகப் படுத்து உறங்கிக்கொண்டிருந்தன. காலையில்தான் எனது உடையில் இரத்தக்கறைகளையும் விரல்களில் ஒன்று முறிந்து போனதையும் கண்டு கொண்டேன். வீட்டினுள் சென்று ஓர் மூலையில் முடங்கிக் கொண்டு மற்றவர்கள் நித்திரை விட்டெழும் வரை அங்கு காத்திருந்தேன். எனது நோவுகளை மீண்டுமொரு முறை நினைவில் கொண்டுவர முயன்றேன். எனக்கு வந்ததெல்லாம் ஆற்றமுடியாத கோபம் தான். மீண்டும் மீண்டும் எனக்கு ஆறுதல் கூற ஒருவருமில்லையே என்ற வருத்தம் தான் மேலோங்கியது. காற்று மாத்திரமே என்னை மெல்லத் தழுவிப்போனது. எனது இருதயம் நானும் அதைப்போல சுதந்திரமானவளென எனக்குச் சொன்னது.

அப்பா வெளியே வந்தார். நான் அவரைப் பார்க்கும் போது வானத்திலிருந்து ஒரு பெரிய பாறாங்கல் அவர் தலை மீது விழுந்தால் எவ்வளவு நன்றாகயிருக்குமென நினைத்தேன். எனது கோலத்தைப் பார்த்து அவர் தன்னுள் வெட்கப்படுகிறார் என்பது எனக்குத் தெரிந்தது. 'எனது விரல் முறிந்து விட்டது' என நான் சொன்னேன். அப்பா ஒன்றுமே சொல்லாது ஆடுகளை வெட்டிய மரத்தடிக்குச் சென்று ஆகாயத்தை நிமிர்ந்து பார்த்தார். சிறிது நேரத்திற்குப் பின்பு மௌனமாக என்னைக் கடந்து வீட்டினுள் சென்றர். திரும்பி வரும்போது கையில் கத்தியும் கம்புமாக வந்து மௌனமாகக் கம்பைச் சீவிக் கொண் டிருந்தார். என்ன செய்யப் போகிறார்? ஆடுகள் மாதிரி என்னையும் தடியில் சொருகி நெருப்பில் வாட்டப்போகிறாரா? கம்பைச் சீவி முடித்ததும் அப்பா ஒன்றுமே பறையாது வீட்டினுள் என்னைக் கூட்டிச் சென்று விரல் முறிந்திருந்த எனது கையைக் கழுவினார். சீவிய கம்புத் துண்டுகளை வைத்து என் விரலை நிமிர்த்திக் கட்டினார். வலி தாங்க முடியவில்லையாயினும் நான் அழுவதைப் பார்க்கும் சந்தோசத்தை அவருக்குக் கொடுக்க நான் தயாரில்லை. எனவே அழுகைக்குப் பதிலாக இருமலைப் பயன்படுத்திக்கொண்டேன். பழிவாங்கும் தாகமும் துயரமும் கலந்த ஓர் உணர்வு என்னுள் உருக்கொண்டது. நான் பெரியவளாக வளர்ந்ததும் எனது சினேகிதர்களைக் கொண்டு இவர்களைப் பழிவாங்க வேண்டுமென்று சங்கற்பம் செய்து கொண்டேன்.

**நான் நித்திரை கலைந்து எழுந்தபோது என்னைச் சுற்றி இருள் கவிழ்ந்திருந்தது. நான் எங்கிருக்கிறேன் என்றே எனக்குப் புரியவில்லை. அதை இரவின் குளிர் காற்று எனக்குப் புரிய வைத்தது. ஆச்சரியத்துடன் இரவின் ஒலிகளைக் கேட்டேன்.**

எனது நண்பர்களைச் சாப்பிட என்னைக் கட்டாயப்படுத்தியதற்கு பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் என்னுள் பெரிதாகிக் கொண்டே வந்தது. ஒன்றன்பின் ஒன்றாக என் நண்பர்கள் இவர்களால் கொல்லப்படுகிறார்கள், உணவாக்கப்படுகிறார்கள். ஆடுகளின் கதறல் எனது நினைவுகளையும் கனவுகளையும் ஆக்கிரமிக்க எனக்குக் கிட்டத்தட்டப் பைத்தியமே பிடித்த நிலை. என்னால்சரிவரத்தூங்கமுடியவில்லை.பூச்சிக் கொல்லி மருந்து பற்றிச் சிந்திக்கத் தொடங்கினேன். அப்பாவின் எல்லா மாடுகளுக்கும் நஞ்சு வைக்கலாமா என யோசித்தேன். ஆயினும் வரிசையாக மாடுகள் இறந்து கிடக்கும் காட்சியையும் அதனால் வரக் கூடிய பிரச்சினைகளையும் நினைத்துப் பார்த்து என் திட்டத்தைக் கைவிட்டேன்.





வடமாகாணசபை உறுப்பிணர் ம.தியாகராசாவினால் வவுனியா தெற்குவலய பூவரசங்குளம் மகாவித்தியாலயத்திற்கு பாண்ட் வாத்தியக்கருவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.




# கொக்குவில் சந்தையின் சீர்கேடு

யாழ்ப்பாணத்தின் முக்கிய சந்தைகளில் ஒன்று நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட கொக்குவில்பிரதான சந்தை. தினமும் நூற்றுக்கணக்கானவர்கள் வந்து செல்லும் இடம். கொக்குவில், யாழ்ப்பாணம், வராகி, சாவக்காடு, பொற்பதி வீதி போன்ற பல்வேறு பிரதேசங்களை சேர்ந்த மக்களின் தேவைகளை இந்த சந்தைதான் பூர்த்தி செய்கிறது. தினமும் நூற்றுக்கணக்கானவர்கள் வந்து செல்லும் இந்த சந்தையில் பல்வேறு குறைபாடுகள் உள்ளதாக மக்கள் முறையிடுகிறார்கள்.

இங்குள்ளவாகனதரிப்பிடகொட்டகைகள் மிகவும் தாழ்வாக உள்ளமை மக்களை அசௌகரியத்திற்கு உள்ளாக்குகிறது.இதனால் அடிக்கடி பலர் தலையில் காயமடைவது வழக்கமான நிகழ்வாகிவிட்டது. தாழ்வான வாகன கொட்டகை காரணமாக சந்தைக்கு வாகனத்தில் வருபவர்கள் வீதியோரமாகவே வாகனங்களை நிறுத்திவிட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. பிரதானவீதியின் இரண்டு பக்கமும் வாகனங்கள் நிறுத்தப்படுவதால் அந்தப்பகுதியில் போக்குவரத்து நெரிசலும் ஏற்படுகிறது. வாகனங்கள் வீதியிலேயே நிறுத்தப்படுவதால், வாகனத்தரிப்பிடத்தை குத்தகைக்கு எடுத்தவர்களிற்கு வருமான இழப்பும் ஏற்படுகிறது.

இந்த சந்தையில் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய குறைபாடு, சில வியாபாரிகளின் முறையற்ற நடத்தை. பழுதடைந்த மீனை விற்பனை செய்யும் வியாபாரிகள் தொடர்பான தகவல் அண்மையில் வெளியாகியிருந்தது. பழுதடைந்த மீன் விற்பனையில் ஈடுபட்ட பெண்ணொருவர் அண்மையில் கையும்மெய்யுமாக பிடிக்கப்பட்டு, அவரிடமிருந்த பழுதடைந்த மீன்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. அந்தப்பெண் ஒரு வாரம் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாதென தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

பொதுச்சந்தையில் வியாபாரம் முடிந்த பின்னர் ஏனைய மீன் வியாபாரிகளிடம் மிஞ்சும் மீன்களை குறைந்த விலையில் கொள்வனவு செய்து ஐஸ் பெட்டிகளில் வைத்திருந்து, மறுநாள் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட மீன்களுடன் கலந்து விற்பதை இந்த வியாபாரி பல கால வாடிக்கையாக வைத்திருந்ததாக சக வியாபாரிகளே குற்றம் சுமத்துகிறார்கள். ஏற்கனவே இரண்டு தடவைகள் இவர் கையும் மெய்யுமாக சிக்கியிருக்கிறார். அப்போதெல்லாம் மிகச்சாதாரண தண்டனையுடன் தப்பித்துக் கொள்வதே மீண்டும் மீண்டும் இந்த முறையற்ற செயற்பாட்டில் ஈடுபட வைப்பதாக குற்றம் சாட்டப்படுகிறது.

பொதுச்சந்தைகளில் பாதுகாப்பான உணவுகள் விற்பனை செய்யப்படுவதை உறுதி செய்வது சம்பந்தப்பட்ட பிரதேசசபைகளின் கடமையல்லவா? ஒரே வியாபாரி மூன்று தடவைகள் பழுதடைந்த மீனை விற்பனை செய்வதையும், வசதிக்குறைவுடன் சந்தை இயங்குவதையும் பிரதேசசபை கவனிக்காமல் விட்டுள்ளதா?

**தனபாலசிங்கம்**
**பொதுமகன்**



சந்தைக்கு நெடு நாட்களாக வருகின்றேன். இது வரை சந்தையின் முகப்பு வாயில் வீதி சீரமைக்கப்படவில்லை. இதனால் பெரும் சிரமத்திற்குள்ளாகிறோம். இந்த வாயிலினூடாக செல்லும் போது விழுந்து எமது கால், கைகளை முறித்துக்கொண்டாலும் வாகனங்களிற்கு சேதமேற்பட்டாலும் பிரதேசசபை எதுவும் செய்யப்போவதில்லை. நாம் தான் கஸ்ரப்பட வேண்டும். ஆகவே இந்தவீதியை உடனே செப்பனிட்டு தர வேண்டும்.

**தாமோதரம்பிள்ளை தியாகமூர்த்தி**
**முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்**

நான் பலகாலமாக எனது தேவைகளுக்காக பொருட்களை கொள்வனவு செய்ய இச்சந்தைக்கு வரும் போது இச்சந்தையின் நுழைவாயிலினூடாக செல்வதற்கே பயமாக இருக்கின்றது. ஏனெனின் பிரதான வீதியில் இருந்து இச்சந்தை வாயில் மிகவும் சரிவாக இருப்பதுடன் வாகன தரிப்பிட கொட்டகைகளின் உயரமும் குறைவாகவே உள்ளதனால் பெரும் அசௌகரியமாக உள்ளது. மேலும் சில வியபாரிகளால் நீண்டகாலமாக விற்பனை செய்துவரும் மீன்கள் தொடர்பாக மக்கள் பெரும் அசௌகரியமடைகின்றனர்.

**திருமதி தி.அன்னலிங்கம்**
**செயலாளர், நல்லூர் பிரதேச சபை**


சுகாதார பரிசோதகரர்களால் நடாத்தப்பட்ட திடீர் சோதனையில் பாவனைக்குதவாத மீன் வகைகளை வைத்திருந்த மற்றும் விற்பனை செய்த வியாபாரியொருவர் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டார். அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட மீன்களும் அழிக்கப்பட்டது.

அவருடைய வாழ்வாதாரம் இத்தொழில் என்ற அடிப்படையில் ஒரு வார காலத்திற்கு சந்தையில் வியாபாரம் மேற்கொள்வதற்கு அனுமதி மறுக்கப்படுவதுடன் இனிவரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகளில் மீண்டும் ஈடுபட்டால் கொக்குவில் பிரதான சந்தையில் மீன் வியாபாரம் செய்வதற்காக வழங்கப்பட்ட அனுமதியினை நிரந்தரமாக நீக்குவதுடன் வியாபாரம் செய்வதற்கும் தடை விதிக்கப்படும். அத்துடன் நெடுநாட்களாக காணப்பட்ட பொதுச்சந்தை நுழைவாயில் வீதியை விரைவில் செப்பனிட்டு வாகன தரிப்பிட கொட்டைகைகள் சீர் செய்து கொடுக்கப்படும்.

சந்தையில் உள்ள பிரச்சனைகளுக்கான தீர்வினை தருமாறு மக்களினால் கையெழுத்திடப்பட்டு மகஜர் ஒன்று பிரதேச சபை செயலாளருக்கு வழங்கப்பட்டும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. மக்களிற்கான அசௌகரியங்களை தீர்ப்பதற்கு நல்லூர் பிரதேச சபை முன்வர வேண்டும் ஏனெனில் மக்களுக்காகதான் சந்தையே தவிர சபைக்காக அல்ல, மக்களின் வரிப்பணத்தில் பிரதேசசபை இயங்குவதனால் மக்களின் நலனில் சபை அக்கறையாக செற்பட வேண்டும்.










அண்மையில் கொழும்பில் நடந்த ஐதேகவின் மேதின நிகழ்வில் மகிந்த அணியை கேலி செய்யும் விதமாக உருவங்களையும் காட்சிப்படுத்தியிருந்தனர்.




SIVA'S FURNITURE
சிவாஸ் தளபாட விற்பனை நிலையம்
அனைத்து விதமான
தளபாடங்களையும்
எம்மிடம் மலிவாக
பெற்றுக் கொள்ளலாம்...
TEL
077 634 1119
கே.கே.எஸ் வீதி, பெரிய மதவடி, சுன்னாகம்.





## அனுஷ்கா அவதாரம்

நடிகை அனுஷ்கா சர்மாவும் படத்தயாரிப்பில் இறங்கியுள்ளார். தற்போது சல்மான்கானுடன் "சுல்தான்" படப்பிடிப்பில் பிசியாக இருந்தாலும் படத்தயாரிப்பு வேலைகளையும் கவனித்து கொள்கிறார். தான் அதிக படங்கள் நடிக்க வேண்டும் என்பதற்காக படத்தயாரிப்பில் ஈடுபடவில்லையென்றும், தரமான படங்களை தர வேண்டுமென்பதற்காகவே தயாரிப்பில் இறங்கிய தாகவும் கூறியுள்ளார்.


## தம்ஸ் தமன்னா

நொந்து நூடில்ஸாகிக் கொண்டிருந்த தமன்னாவின் திரை வாழ்க்கையில் பாகுபலியும், உப்பிரியும் (தமிழில் தோழா) தண்ணீர் ஊற்றியுள்ளன. கண்டுகொள்ளப்படாமலிருந்த தமன்னாவின் மீது இப்பொழுது மீண்டும் வெளிச்சம் படர்ந்துள்ளது. இந்தநேரம் பார்த்து தமன்னாவிற்கு திருமணம் என யாரோ கொளுத்திப் போட்டுள்ளார்கள். கணினி பொறியியலாளர் மாப்பிள்ளையாம். செய்தியை பார்த்து அரண்டுபோன தமன்னா, அப்படியொன்றுமில்லையென கூறியுள்ளார். "நான் சிங்கிள்தான். இப்போதைக்கு திருமணம் செய்யும் எண்ணமில்லை" என்றுள்ளார்.



## பஞ்சரான பஜ்வா

தெலுங்கு இயக்குனர் சுனில் ரெட்டி என்பவரை பூனம் பஜ்வா திருமணம் செய்துவிட்டார் என சில நாட்களின் முன்னர் தெலுங்கு பத்திரிகைகள் பரபரப்பை கிளப்பின. சொல்லாமல் கொள்ளாமல் ஏன் ரகசிய கல்யாணம் என அறிவதற்காக அம்மணியை தொடர்பு கொண்டு கேட்டால் அவர் வெடித்து கிளம்பிவிட்டார். தனக்கு திருமணமாகவில்லையென்றார். அண்மையில் தனது தங்கைக்கு திருமணம் நடந்ததாகவும், அதை வைத்து சிலர் வதந்தி பரப்பிவிட்டதாகவும் கூறினார். உலகமே அறியும் விதத்தில்தானாம் தனது கல்யாணத்தை செய்வாராம்.



## அட்வைஸ் சொல்லாத கமல்

கமலின் புதிய படம் "சபாஷ் நாயுடு". கமலின் மகளாக ஸ்ருதி இதில் நடிக்கிறார். இந்த படத்தின் ஆரம்பவிழா அண்மையில் நடிகர்சங்கத்தில் நடந்தது. இந்த நிகழ்வில் பல நடிகர், நடிகையர் கலந்து கொண்டபோதும் அஜித், விஜய் கலந்து கொள்ளவில்லை. இதுபற்றி கமல் கூறும்போது, அவர்கள் இருவருக்கும் நான் அட்வைஸ் சொல்ல மாட்டேன். இருவரும் அவரவர் பட சூட்டிங்கில் பிசியாக இருக்கலாம் என்றார். நடிகர் சங்க விழாக்களில் அஜித், விஜய் இருவரும் கலந்துகொள்வதில்லையென்பது குறிப்பிடத்தக்கது.



## உடையணியும் ஹன்சிகா


உதயநிதி நடித்த "மனிதன்" பட நாயகி ஹன்சிகா. இதில் ஆசிரியையாக நடித்துள்ளார். இதில் மேக்அப் இல்லாமலும் நடித்துள்ளாராம். அமைதியான பெண்ணாக, தலையை படிய வாரி நடித்திருக்கிறாராம். இதற்கு முன் இப்படியொரு வேடத்தில் நடித்ததில்லை என்றுள்ளார். ஜெயம் ரவியுடன் விரைவில் நடிக்கவுள்ள "ரோமியோ ஜூலியட்" படத்தில் குடும்ப பெண்ணாக நடிக்கிறாராம். இதுவரை ஹன்சிகாவை துகிலுரிவதிலேயே இயக்குனர்கள் குறியாக இருந்த நிலையில், மாறுபட்ட வேடத்தில் ஹன்சிகாவிற்கு வாய்ப்புக்கள் வர ஆரம்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# டூரிங் டாக்கீஸ்



## கைகோர்க்கும் சிம்பு, தனுஷ்

முன்னர் ஒருகாலத்தில் கமல், ரஜினி மாதிரி பின்னர் அஜித், விஜய். பிறகு அது சிம்பு, தனுஷ் என்றானது. இருவருமே பகிரங்கமாக மோதிக்கொள்ளாவிட்டாலும் உள்ளுக்குள் புகைந்து கொண்டுதானிருந்தார்கள். படங்களில் போட்டி பஞ்ச் வசனங்களும் வைத்தார்கள். இவர்கள் இருவரையும் சகநேரத்தில் இயக்கிக் கொண்டிருக்கிறார் கௌதம் வாசுதேவ் மேனன். இதில் தனுஷ் நடிக்கும் “என்னை நோக்கி பாயும் தோட்டா“வில் சிம்புவும் ஒரு நடனம் ஆடவுள்ளாராம். சிம்பு, தனுஷ் இருவரையும் ஒன்றாக ஆட வைத்தால் படம் பிய்த்துக் கொண்டு போகுமென கௌதம் திட்டமிட்டுள்ளாராம்.



## சேதுபதி + லட்சுமி

ஜிகிர்தாண்டா படத்தில் விஜய் சேதுபதி நடித்தார். லட்சுமிமேனனும் நடித்தார். ஆனால் இருவரும் ஜோடியாக நடிக்கவில்லை. இப்பொழுது முதன்முறையாக ஜோடியாக இணைகிறார்கள். வரும் 11ம் திகதி படப்பிடிப்பு தொடங்குகிறது. ஜிகிர்தாண்டா படத்தில் நடித்த சமயத்தில் விஜய் சேதுபதி இவ்வளவு பெரிய ஆளாக வருவார் என எதிர்பார்க்கவில்லையென்றும், விஜய் சேதுபதியின் அசத்தல் நடிப்பிற்கு தான் ரசிகை என்றும் லட்சுமி மேனன் கூறியுள்ளார்.



## கலவர காஜல்

சீனியர் நடிகர்கள் (வயதான) ஜோடியாக நடிக்க ஆசையென்றுதான் ஒவ்வொரு நடிகைகளும் சொல்கிறார்கள். ஒவ்வொரு பேட்டியிலும் ரஜினி, கமல், பாலகிருஸ்ணா ஜோடியாக நடிக்க காத்திருக்கிறேன் என சொல்வார்கள். இந்த வரிசையில் காஜலும் இருக்கிறார். ஆனால், அது வெறும் பேச்சு என்கிறார்கள். அண்மையில் இயக்குனர் க்ரிஷ் இவரை தொடர்பு கொண்டு பாலகிருஸ்ணாவின் 100 வது படத்தில் நடிக்கிறீர்களா என கேட்க, பதறியடித்துக் கொண்டு மறுத்து விட்டாராம்.

சோதிட ஆலோசகர்
சி.இராசநாயகம்
0776147392





# துர்முகி வருஷம் சித்திரைப்புத்தாண்டு இராசிகளுக்குரிய பலாபலன்கள்

## தனுராசி



**சாதகமானவை:** ஐஸ்வரியம் நோக்கிய செயலிருத்தல், சிநேகித ஆதரவு உதவி அமைதல், உடல் ஆரோக்கியம் பேணுதல், விவேகமாகக் கருமங்களைக் கையாளல், நல்ல புகழ் நிலைத்தல், தனலாபம், போசனசுகம் இருத்தல், ஆடை, ஆபரணம் சேர்தல், குழந்தைச் செல்வம் கிட்டும் நிலை, புத்திர, புத்திரிகளால் மனதில் சந்தோசம் நிலவுதல், பெரியோர் நட்பு அமைதல், வாகனம் சார்ந்த நலன்கள் பெறுதல், திருப்தியான நித்திரைச் சுகம் உண்டாதல், செய்தொழில் மூலம் பொருள், புகழ் இருத்தல், கல்விசார் விருத்திகள் பெறுதல், சிலருக்கு நல்ல சன்மானம், வெகுமதிகள் கிடைத்தல், மனச்சந்தோச நிலை தொடர்தல், சிலருக்குப் புதிய பதவி நிலை கிட்டுதல், எதிரிபகையாளிகளை வெற்றி கொள்ளல், இனசன பந்துக்களுடன் நிகழ்வுகளில் பங்கேற்றல், திருமணம் சம்பந்தப்படும் நிலைகளில் தாமத நிலை கண்டாலும், கைகூடி வரவும், மாணவர்கள் கடும்பிரயனத்தத்தால் வெற்றிப்படியை அடையவும், வியாபார முயற்சியாளர்கள் நல்லது கெட்டது லாபம், நஷ்டம், என மாறிமாறிப் பலன் அனுபவிப்பார்.

**பாதகமானவை:** வரவுக்கேற்ற செலவு, வீண்பிரயாசனப்படல், தான, தர்ம கருமங்கள் குறைதல், சிலசில இடைஞ்சல்களை சந்தித்தல், அலைச்சல் மிகுதி, தேகசுகம் இடையிடையே பாதிக்கப்படுதல், கெட்ட சிநேகிதரால் சிலருக்கு கஸ்டம், நஷ்டம், துன்பம் இருத்தல், மனதில் கவலை தொடர்தல், தொழில் மாற்றம் தொழிலிடம் மாறுதல், அவமானப்படுதல், திருட்டுப் போதல், சேமிப்பு நிலை பாதிப்புப் பெறுதல், சிலரது கோள் குண்டணிகளால் தொல்லை அமைதல், நோய் நொடிக்குப் பணவிரயம், அதகம் இருத்தல், குடும்பசுகம் பாதித்தல், பொருளாதார வளம் பாதிக்கவும் பலனுண்டாகும்.

**முக்கிய கவனிப்பு:** *7அரை முற்கூறுநிலை, 12 ஆம் நிலை சனி அமர்வும், 10 ஆம் நிலைக்கு வியாழமாற்றம் அமைந்துள்ளதும், கஸ்டநஷ்டம் காட்டும், மாதம் ஒரு தடவை தட்சணாமூர்த்திக்கு நெய்விளக்கும், குருவிற்கு கடலை மாலை வணக்கமும் சனீஸ்வரர் ஆஞ்ஞநேயர் வழிபாட்டினை 9 சனிக்கு ஒரு தடவை பூர்த்தி பண்ணிவருவதும் நன்மைக்கு உதவும்.*

## மகரம்



**சாதகமானவை:** மனதில் எண்ணிய கருமங்கள் படிப் படியாக நிறைவேறும், ஆடைஆபரணசுகம் இருத்தல், நல்ல மதிப்பு இருத்தல், பொருள் சேர்க்கை, எதிரி பகையாளிகளை வெற்றி கொள்ளல், பிள்ளைகளால் நன்மை உண்டாதல், தனதானிய லாபமிருத்தல், பெண்கள் சவகாசம் சிலருக்குக் கிடைத்தல், கொடுக்கல் வாங்கல் நிலை தொடரச்செய்தல், சிநேகிதரால் நல்ல நன்மை அடையச்செய்தல், பணியாட்கள் மூலம் பல நன்மைகள் அனுபவித்தல், புதிய புதிய முயற்சிக்கு சிலர் உற்சாகம் பெறுதல், போட்டிகளில் நல்ல வெற்றிப் பெறுபேறு கிடைத்தல், பலருடன் நல்ல தொடர்புகளை வைத்து வரல், நல்ல நித்திரை, நல்ல உணவு, நல்ல தேகசௌக்கியம் அமைதல், ஒரு சிலர் தொழிலில் இணைந்து கொள்ளல், காணி, பூமி தொடர்பில் சாதகமான நல்ல முடிவுகள் எட்டப்படுதல், பொதுசன மதிப்பு இருத்தல், தூரதேச உறவினர் சந்திப்பு, வியாபார முயற்சிகள் நல்ல நிலையில் தொடர்தல், அரச ஊழியர்கள் மதிப்புப் பெறுதல், விவாகம் தொடர்பான முயற்சிகள் வெற்றியாய் பலனளித்தல், கல்விசார் முயற்சியாளர்கள் நல்ல பெறுபேறுகளையும், நல்ல மதிப்பையும் பெறும் பலன்களும் காணப்படுதல்.

**பாதகமானவை:** குடும்பசுகம், கணவன், மனைவி உறவுகள் இடையிடையே பாதிப்புப் பெறுதல், பிரயாணங்களால் அலைச்சல் கவலைகள் தொடர்தல், பிள்ளைகள் குறித்த மனக்கவலை இருத்தல், சில ஏமாற்றங்களைச் சந்தித்தல், சில குற்றம் குறை கேட்கும் நிலை அமைதல், ஒரு சிலர் ஒரு சிலரது பொறாமைக்கு ஆளாதல், இனசன பந்துக்களுக்கு சில கெடுதல்கள் வந்து துன்பம் அனுபவித்தல், வீண்பழிகளை சிலர் சந்தித்தல், சில சந்தர்ப்பங்களில் கோபப்பட்டு தகாத செயல்களில் ஈடுபடச் செய்தல், தேகசுகம் இடையிடையே பாதிப்பு நிலை பெறுதல், இன்னும் சிலர் அரச அதிகாரிகளின் எதிர் நடவடிக்கைகளில் சிக்கிக் கொள்ளல், போன்ற பலன்களையும் அனுபவிக்கச் செய்யும்.

**முக்கிய கவனிப்பு:** *சனி 11ஆம் நிலை கோசரமாற்றம், வியாழமாற்றம், 9 ஆம் நிலைக்கு வருதல், நன்மைகளை அதிகளவில் அனுபவிக்கச் செய்யும், இவ் வருடம் யூலை மாதம் வரை மத்திம பலனையும் தரும், மாதம் ஒரு தடவை சனி வியாழ நாட்களில் சனீஸ்வரர், தட்சனாமூர்த்தி வழிபாடு போதுமானதாகும்.*

## கும்பராசி



**சாதகமானவை:** நல்ல மதிப்புடன் கருமங்களை முன்னெடுத்தல், போசனசுகம், சயன சுகம் நன்றாயமைதல், ஆடைஆபரணசுகம் அமைதல், பொருள் வரவுகள் காணப்படுதல், ஊக்கமுடன் உழைப்பு இருத்தல், எதிரி பகையாளிகளை வெற்றி கொள்ளுதல், வாகனம் சார்ந்த விடயங்கள் சாதகமாக நல்ல முடிவுகள் தருதல், நல்ல விவேகமாகச் செயற்படும் நிலை அமைதல், மதிப்பு, புகழ், கௌரவம் நன்றாயமைதல், பணியாட்களால் பல நன்மைகள் கிட்டுதல், பணவரவுகள் தொடர்தல், மனச்சந்தோச நிலை இருக்கப் பெறவும், கல்வி மற்றும் தொழில் உயர்வு தகுதிகள் நல்ல நிலையில் இருக்கப் பெறவும், வெளிநாடு செல்லும் முயற்சிகள் கைகூடி வரவும், ஒரு சிலருக்கு பதவி நிலையில் மாற்றம் இருக்கவும், குடும்பசுகம் சுமூக நிலையில் தொடரவும், சிலருக்கு நல்ல வெகுமதி சன்மானம் கிடைக்கவும், பலன்களைக் காட்டும்.

**பாதகமானவை:** தேகசுகம் பாதிப்பு தொழில் நிலைகளில் இடையிடையே கஸ்டம், நஷ்டம், பாதிப்பு, வீண் முயற்சி, வீண் அலைச்சல் அமையவும், இனசனபந்து பகை இருக்கும் குடும்பசுகம் புத்திர நிலைப்பாடுகளால் பாதிப்பு பொருள் விரயமும் மனக்கவலையும் இருத்தல், பிரயாணங்கள் பயனற்றுப் போதல், ஒரு சிலர் தீய பழக்கவழக்கங்களில் சிக்கித் தவித்தல், அவமானம் இருக்கப் பெறுதல். கால், கை, நோய் பிணி சிலருக்கு அதிகம் காணப்படுதல், இடையிடையே பொருள் நஷ்டம் பெறுதல், குற்றம் குறை கேட்கும் நிலை இருத்தல், மனப்பயமிருத்தல், ஒரு சிலர் ஆபத்து, விபத்து போன்ற நிலைகளைப் பெறுதல், சில பொறாமையாளர்களால் சிலர் பலவழிகளிலும் பல கஸ்டங்களையும் அனுபவிக்கச் செய்யும்.

**முக்கிய கவனிப்பு:** *சனி 10 ஆம் நிலை குருபகவான் 8 ஆம் நிலைக்கு ஆகஸ்ட் மாற்ற நிலை தேகசுகம், பொருளாதாரம், குடும்பசுகம், கல்வி பதவி நிலைகள் என்பவற்றில் மந்தமான நிலையும் காட்டும். மாதம் ஒரு தடவை வியாழன் சனீஸ்வரர் ஆஞ்ஞநேயர் வழிபாடு அவசியமாகும். இதனை சனி வியாழன் நாட்களில் தொடர்வது நல்லது.*

## மீனம்



**சாதகமான்வை:** மனையில் பல சிறப்புக்கள் நடைபெறல், மனதில் சந்தோசம், எதிரியை வெற்றி கொள்ளல், தனதானிய விருத்திகள் இருந்து வருதல், சிநேகிதத்தால் மனச்சந்தோசநிலை பெறுதல், வெளிநாடு செல்லும் முயற்சிகளுக்குப் பலன் கிட்டுதல், கருமங்களை வெற்றியாய் முடிக்கப் பாடுபடுதல், கணவன் மனைவி தொடர்புகள் சுகம் பெறுதல், பணவரவுகள் அமைதல், தான தர்ம காரியங்களில் ஈடுபடுதல், கால் நடை விருத்திகள், போசனசுகம், சயனசுகம் நன்றாயமைதல், போட்டிகளில் வெற்றி கிட்டுதல், கல்விசார் முயற்சிகளில் பலன் அமைதல், கௌரவம் புகழ் பாதிப்பில்லாத நிலை பெறுதல், வாகனம் சார்ந்த முயற்சிகள் நல்ல பலன் தருதல், பொருளாதாரம் நல்ல முறையில் தொடர்தல், எண்ணிய கருமங்கள் படிப்படியாய் கைகூடவும், வியாபார முயற்சிகளில் உள்ளோர் பலம் பெறவும், திருமணவிவகாரங்கள் தாமதப்பட்டாலும் கைகூடி மனச்சந்தோசம் தரவும், மாணவர்கள் கல்வி முயற்சிகளில் உற்சாகமாய் தொடரவும் பலன் செய்யும்.

**பாதகமானவை:** செய்கருமங்களயில் சில சில இடையூறுகள், சில தாமத நிலைகள், வீண் மனஸ்தாபங்கள், ஆயுததளபாடங்களால் உடல் நிலை பாதிப்புப் பெறுதல், வீண் அலைச்சல் காணப்படுதல், கணவன் மனைவி உறவு பாதிக்கப்படுதல், இனசனப் பகை அமைதல், தூக்கம் கெடுதல், பிள்ளைகளால் மனதில் சில கவலைகளைச் சந்தித்தல், கண்களில் வியாதி தோன்றி மறைதல், சில தீய பழக்கம் கொண்ட சிநேகிதர்களால் கஸ்டம், நஷ்டம், இருத்தல், வாக்குவாத நிலை உருவாதல், சில அவமான நிலை இருத்தல், போன்றவை இருக்கச் செய்யும்.

**முக்கியகுறிப்பு:** *2016 யூலை வரை வியாழன் 6 ஆம் நிலை நோய் நொடி கடன் தொல்லை தரும். அதன் பின் 7 ஆம் நிலை நல்ல பலன்களைக் காட்டும். சனி மாற்றம் 9 ஆம் நிலை பொருள் நஷ்டம், உட்பட முன் சொன்ன பலனையும் தரும். சனீஸ்வரர், ஆஞ்ஞநேயர், தெட்சணாமூர்த்தி வழிபாடு மாதம் 1 தடவை சனி, வியாழன் நாட்களில் செய்வது சுகம் தரும்.*

**08.05.2016 முதல் 14.05.2016 வரை சந்திராஷ்டம நிலை பின்வருமாறு அமையும்.**

*துலாராசி: 8,9 திகதிகள்.*
*விருச்சிகராசி: 10,11 திகதிகள்.*
*தனுராசி: 12,13 திகதிகள்.*
*மகரராசி: 14 திகதிகள்.*

**ஏனைய இராசிகளுக்கு இவ்வாரம் சந்திராஷ்டமம் இல்லை.**

இந்த சந்திராஷ்டம நாட்களில் நோய், பிணி, துன்பம், துயரம், கஸ்டம், நஷ்டம், அலைச்சல், இழப்பு என்பன நிகழலாம் என்பது சோதிட விதி ஆகும்.

### வாரம் ஒரு தகவல் (இடது கை)

தனது இடது கையினால் ஆசனம் போட்டால் ஆயுள் குறைவு.

தனது இடது கையினால் எண்ணெய் தேய்த்துக் கொண்டால் புத்திநாசம்.

தனது இடது கையினால் சாப்பாடு போட்டால் செல்வம் அழியும்.

தனது இடது கையினால் படுக்கையை போட்டால் இருப்பிடம் சேதமாகும்.

தனது இடது கையினால் தண்ணீர் அருந்தக் கூடாது. (சாப்பிடும் நேரம் தவிர)

# தீப்பற்றி எரியும் உடம்பு தப்பிக்க சில வழிகள்

பூமிக்கு கீழே யாரப்பா நெருப்பை பற்ற வைத்தது என்றுதான் கேட்கத் தோன்றுகிறது. அப்படியொரு வெக்கை. மனிதர்களை எரித்தே கொன்றுவிடும் என அச்சப்பட வைக்கிறது. 'அட.. நாம துபாயில இருந்த மாதிரியே இருக்கு' என மத்திய கிழக்கிலிருந்து திரும்பி வந்தவர்கள் தங்கள் மனைவிகளிடம் சொல்லி உள்ளுக்குள் ஆறுதல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கொளுத்தும் கோடையில் நம்மவர்கள் என்னென்ன உத்திகளை கையாண்டு சமாளித்துக் கொள்கிறார்கள் என்பதை பார்க்க வீதிக்கிறங்கினோம்.



**சி.மேனகா**
**கொழும்புத்துறை**

காலையிலை தையல் கடைக்கு வந்தால் பின்னேரம்தான் வீட்டுக்கு போவோம். கடையிலையும் வெக்கை வாட்டி வதைக்கும். அதிலிருந்து தப்ப என்ன செய்வமென்றால், கடைக்கு முன் வீதியில் தண்ணீரை விடுவோம். வேறு என்ன செய்ய முடியும். வீட்டில் இருக்கும் போது தரையை அடிக்கடி ஈரத்துண்டால் துடைக்கும் போது வெக்கை ஓரளவுக்கு தணியும். வீட்டு யன்னலை திறந்தால் என்ன திறக்காட்டி என்ன இரவிலை படுக்க முடியாது. மின்விசிறியை போட்டால் கூட வெக்கையாக இருக்குது.



**இ.நியூட்ராஜ்**
**மாதகல்**

தலையிலை அடிக்கடி தண்ணியை ஊற்றி நனைப்பேன். அப்பொழுது ஓரளவுக்கு வெக்கை தணியும். யாழில் புடைவைக் கடையிலை வேலை செய்வதால் காலை வந்தால் பின்னேரம் தான் வீட்டை போறது. வீட்டை போகும் போது இருளாகி விடும். குளித்து விட்டுத்தான் வீட்டுக்குள் இறங்குவேன். தரையிலை ஒன்றுமே விலீஜீக்காமல் யன்னலைத் திறந்து விட்டு ஹாயாகப் படுப்பேன்.



**இ.தங்கம்மா**
**வட்டுக்கோட்டை**

இந்த வயசிலை எங்க போறது. வீட்டிலதான் முடங்கிக் கிடக்கிறன். வெளிய போனால் கருக்கிவிடும். வீட்டிலயும் இருக்க முடியாது. ஒரே வெக்கை. மரத்தின் கீழ் பாயைப் போட்டு படுத்துவிடுவேன். குறுக்காலை போவார் வீதி போடுறம் என்று மரங்களைத் தறித்ததுதான் இவ்வளவு வெக்கை. தறித்தாங்களே ஒழிய ஒரு மரத்தையும் நட இல்லையே.



**ப.அனுஜா**
**கொழும்புத்துறை**


வீட்டு வளவில் மரம் இருக்குது. அதன் கீழ் போய் இருந்து விடுவன். வெக்கையே தெரியாது. வெக்கையில் இருந்து காப்பாற்றுகிற இந்த மரத்தை என்னால மறக்க முடியாது. தையல் கடையிலைதான் ஒரே வெக்கை. அடிக்கடி முகத்தைக் கழுவிக் கொண்டிருப்பேன். என்ன ஒரே வேர்த்து ஒழுகும் மற்றும் படி ஒன்றுமில்லை.




**ந.மஞ்சுலா**
**கட்டைப்பிறாய்**

வெளியில போறதில்லை வீட்டில தான். காலையிலை தையல் கடைக்கு வந்தால் நாயே பேயே என்று கத்தினால் வெக்கை போய்விடும். தண்ணியில அடிக்கடி காலை கையை முகத்தை நனைத்துக் கொண்டு இருப்பேன். ஒரே சினமாக இருக்கும். எப்பதான் இந்த வெக்கை போகப் போகுதோ தெரியாது.















கல்குடா வலயக்கல்வி அலுவலக நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் சித்திரை புத்தாண்டு விழா அண்மையில் நடந்தது.



# பெண்ணெழுத்து 2

பி.சியா
siyapj27@gmail.com

குடிகுடியை கெடுக்கும் என்று முன்னவர்கள் சும்மா சொல்லி வைத்துவிட்டு போகவில்லை. அது அனுபவ வார்த்தை. பல்லாண்டு கால அனுபவம். குடி சீரழித்த குடும்பங்களின் கதையை நிச்சயம் எல்லோரும் அறிந்து வைத்திருப்போம்.

தமிழர் வாழ்வில் குடியென்பது வாழ்வின் எல்லா கூறுகளிலும் பிணைந்தது. துக்கம், சந்தோசம், இரண்டுமேயற்ற ஏகாந்த மனநிலை என அனைத்து சமயத்திலும் குடிப்பார்கள். இந்த மனநிலையை காரணமாகவும் சொல் வார்கள். நமது சூழலில் உள்ள ஆண்களில் பெரும்பாலானவர்கள் இவர்கள்தான். அவர்களிற்கு குடிப்பதற்கு காரணம் தேவையில்லை. குடிக்க வேண்டும். அவ்வளவுதான்.

இதற்கு கொம்புசீவி விடுகிறது சினிமா. காதலில் தோல்வியா, ஆயா அடித்தாரா உடனே சாரயக்கடையில் பாட்டுசீன். காதலி சம்மதித்தாளா, வேலை கிடைத்ததா அதற்கும் நண்பர்களுடன் "ஓப்பின் த சாராயப் போத்தல்".


நம்மவர்கள் மதுவிற்கு போதையென்றும் ஒரு அர்த்தம் வைத்துள்ளனர். அது பண்பாட்டு பெயர். நமது பண்பாட்டில் நிதானமாக மது அருந்துபவன் "மொன்னையன்". குடித்தால் அண்டசராசரமும் சுழல வேண்டும். உண்மையான குடிகாரன் என்றால் தள்ளாட வேண்டும் என்றுதான் நினைக்கிறார்கள். குடிகாரர்கள் பலரிடம் பேசினீர்கள் எனில், அவர்கள் அனைவருமே சொல்லி வைத்ததுபோல சொல்வார்கள் "ஊருப்பட்ட பிரச்சனை. கவலையை மறக்க குடிக்கிறோம்" என. மனச்சிக்கல், குடும்ப சிக்கல் உள்ளிட்ட பிரச்சனைகளிருந்து விடுபட மிகச்சிறியளவானர்கள் தியானத்தை நாடுகிறார்கள். அவர்கள் ஓரளவு படித்தவர்களாக இருப்பார்கள். பெருமளவானவர்கள் மதுவைத்தான் நாடுகிறார்கள். இதில் அனைத்து வகையானவர்களும் இருப்பார்கள்.

போதையாகி, புறஉலக நினைவுகளிலிருந்து விடுபட, விடுபடுமளவிற்கு குடிக்கிறார்கள். குடி சிலருக்கு தற்காலிக நிவாரணங்களை கொடுக்கலாம். ஆனால், அது நமது சமூகத்தை கொல்லும் முதலாவது விசக்கிருமியாக உள்ளது.

நமது சமூகத்தில் தாராளமாக காணப்படும் குடும்ப வன்முறைகளிற்கு பிரதான காரணம் மதுதான். குடித்துவிட்டு ஆணொருவன் வீட்டுக்கு செல்வானெனில், அந்த குடும்பமே சீர்குலைந்து விடுகிறது.

நிம்மதிக்காக ஒருவன் குடித்துவிட்டு சென்றால், அவனது குடும்பத்தினது நிம்மதியே சீர்கெட்டுவிடும். மனைவியுடன் ரகளை, பிள்ளைகளிற்கு அடி உதை, அயலவர்களுடன் சச்சரவென ஒருவனின் வாழ்க்கை தொடருமெனில், அந்தக்குடும்பத்தின் முதல் எதிரியே அவன்தான். கணவனாக, தந்தையாக குடும்பத்தில் அவனது பாத்திரம் நீடித்தாலும் அவன் பற்றிய எந்த உயர்மதிப்பீடும் பிள்ளைகளிடம் ஏற்படுவதில்லை.

இந்த தொடருக்காக யாழ்ப்பாணத்தின் பல கிராமங்களிற்கும், அகதிகள் முகாம்களிற்கும் சென்று ஏராளம் குடும்பங்களுடன் பேசினேன். அதில் கணிசமான குடும்ப ஆண்கள் குடிகாரர்கள். குடிகார ஆண்களின் குடும்பங்களில் உள்ள வளர்ந்த பிள்ளைகளுடன் பேசியபோது அவர்கள் யாரிடமும் தமது தந்தையர்கள் பற்றிய உயர்ந்த மதிப்பீடுகள் இருக்கவில்லை. அவர் பற்றி பேச விரும்பாமல், அந்த உறவை கடந்து செல்லவே விரும்புகிறார்கள்.



குடிகார தந்தையுள்ள பிள்ளைகளின் மனதில் ஆறாத ரணமொன்றும் உள்ளது. சிறுவயதிலேயே ஏற்படும் இந்த மனப்பாதிப்புக்கள் அவர்களை உளரீதியான தாக்கத்திற்கு உள்ளாக்குமென்பது நிச்சயம்.

மது நாட்டுக்கும் வீட்டுக்கும் கேடு என்ற வாசகங்கள் பரவலாக உள்ளதான். இதை வைத்து மதுவிற்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என கொள்ள முடியாது. ஏனெனில், மதுநிலையங்களிற்கு அனுமதியளிப்பதே அரசுதான். ஒவ்வொரு ஊரிலும், கிராமத்திலும், பிரதானவீதிகளிலும் மதுநிலையங்கள் உள்ளன. அத்தனையும் அரசஅனுமதி பெற்றவை. மதுப்பாவனை பற்றி சிலகாலத்தின் முன்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பகிரங்கவே கவலைப்பட்டிருந்தார். எனினும், பாவிக்கப்பட்ட மது அரச அங்கீகாரம் பெற்றிருந்தது என்பது கவனிக்கத்தக்கது.

முன்னைய அரசின் அமைச்சர் ஒருவர் சொந்தமாக மது உற்பத்தி தொழிற்சாலையொன்றையே வைத்திருந்தார். தாராளமாக எதனோல் இறக்குமதி நடந்தது. போதைவஸ்து கடத்தல்காரர்கள் அமைச்சரவையை அலங்கரித்தார்கள். மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில்தான் அதிகளவான மதுவிற்பனை நிலையங்களிற்கு அனுமதி கிடைத்தது. இதில் கவனிக்கத்தக்க இன்னொரு விடயம், நமது தமிழ் அரசியல்வாதிகள் பலரிடமும் மதுவிற்பனை நிலையங்கள் உள்ளன.

யாழ்ப்பாணத்தில் பல்வேறு உயர்ரக விடுதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவை அனைத்திலும் மது அருந்தும் வசதி உள்ளது. இந்தவிடுதிகளில் பெரும்பாலானவை புலம்பெயர்ந்த தமிழர்களிற்கு சொந்தமானவை. யுத்த சமயத்தில் நாட்டைவிட்டு வெளியேறியவர்கள், பணம் சேர்த்துக் கொண்டு வந்து பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் மதுச்சாலை நடத்தும் கொடுமையை என்னவென்பது?

மதுப்பாவனையுள்ள கணவன் எனில் ஆயுள் முழுக்க துயரத்தை அனுபவிப்பவள் மனைவிதான். மதுபோதையில் மிதக்கும் ஆண்களின் உலகம் இயல்பற்றதாக இருக்கும். சாதாரண அன்பு, பாசத்திற்கு அங்கு இடமிருப்பதில்லை. மனித இயல்புகளின் விதிவிலக்கான அம்சங்களையும், வாழ்க்கையின் மறுபக்கங்களையுமே அவர்களால் பார்க்க முடியும். அவர்களின் நிதானமிழப்பென்பது அந்தக்குடும்பத்தின் வாழ்விழப்பு. இதற்கு உதாரணம் பரமேஸ்வரியின் கதை. யாழ்ப்பாணத்தின் புறநகரொன்றில் வாழும் பரமேஸ்வரியின் வாழ்வை மது எப்படி துவம்சம் செய்ததென்பதை பாருங்கள்.

அம்மா, ஒரு சகோதரனுடன் பிறந்தவர் பரமேஸ்வரி. அப்பா இறந்துவிட்டார். சகோதரன் இளம் வயதிலேயே திருமணம் செய்து கொண்டு போய்விட்டான். தாயார் பலகாரம் சுட்டு, வீடுகளில் சமைத்து குடும்பத்தை கவனித்தார். ஆடு, கோழியும் வளர்த்தார்கள்.

பரமேஸ்வரி குடும்பத்திற்கு காணியிருந்தது. வீடு இருக்கவில்லை. பரமேஸ்வரி திருமண வயதிற்கு வந்ததும், தாயார் தீவிரமாக மாப்பிள்ளை பார்க்கத் தொடங்கினார்.

திருமணத்தரகர் ஒருவர் சம்பந்தமொன்று கொண்டு வந்திருக்கிறார். மாப்பிள்ளை நல்லவர், சோலி சுரட்டில்லாதவர், மேசன் வேலை செய்கிறார் என தரகர் சொன்னதை பரமேஸ்வரி குடும்பம் நம்பியது. ஐந்து இலட்சம் சீதனத்துடன் ஓட்டோ வாங்கிக் கொடுத்து அவரை "கௌரவமான" தொழிலுக்கு மாற்றி மாப்பிள்ளையாக்கினார்கள்.

திருமணம் என்றதும் பரமேஸ்வரிக்குள் ஆயிரம் கனவுகள் விரிந்தன. இதுவரையான கஸ்ர வாழ்க்கை முடிந்து புதிய வாழ்க்கை ஒன்றை எதிர்பார்த்தார். மணவறைக்கு சென்று, கணவன் தாலி கட்டியபோது "என்ர வாழ்க்கை சந்தோசமாக இருக்கணும். கணவன் நிம்மதியாக இருக்கணும்" என கடவுளை மன்றாடியதாக கூறினார் பரமேஸ்வரி.

பரமேஸ்வரியின் கனவுக்கு ஆயுள் அதிகமிருக்கவில்லை. முதலிரவுக்காக பரமேஸ்வரி காத்திருக்க, மதுபோதையில் கணவன் வந்தான். பரமேஸ்வரியின் கனவுகள் ஒரு நொடியில் சிதறி வீழ்ந்தன. அன்றிரவு அடித்து, பலவந்தப்படுத்திதான் அவன் உறவை வைத்துக் கொண்டான். அந்த கொடிய அனுபவத்தை பரமேஸ்வரி இப்படி குறிப்பிட்டார் "நாளை என்னவாகுமோ என நிமிடத்திற்கு நிமிடம் ஏங்கினேன். பயத்தில் நெஞ்சு படபடத்துக் கொண்டிருந்தது. அம்மா எனக்கு கலியாணமே கட்டி வைக்காமல் இருந்திருக்கலாமென மனதுக்குள் திட்டினேன். எல்லோரும் முதலிரவில் காதலில்தான் குளிப்பார்கள். நான் கண்ணீரில் குளித்தேன்".

திருமணத்தின் பின்னரும் கணவனது குடி அதிகரித்துக் கொண்டே சென்றது. அவனை தட்டிக் கேட்கவோ, செல்லமாக கேட்கவோ வாய்ப்பிருக்கவில்லை. மீறிக் கேட்டால் அடி உதைதான். சில சமயங்களில் நெருப்பால் சூடும் வைத்தான். கணவன் குடிக்காத சமயங்களில்தான் பரமேஸ்வரிக்கு நிம்மதி. மிகுதி நேரமெல்லாம் குடியும் அடியும்தான். ஒரு கட்டத்தில் அடியை தாங்கிக் கொள்ளும் சக்தியை பரமேஸ்வரி இழக்கத் தொடங்கினார்.

கணவனின் உழைப்பு பரமேஸ்வரிக்கு தெரியாது. வீட்டுக்கு எப்பொழுதாவது சிறியதொகை பணம் கொடுத்தாலும், பின்னர் அதையும் வாங்கிவிடுவான்.

பரமேஸ்வரி கர்ப்பமடைந்திருந்த சமயத்திலும் குடியும் அடியும் தொடர்ந்தது. குழந்தைக்கும் சேர்த்து வயிற்றில் உதைந்தான். கணவனின் அடி, உதைக்கு பயந்து பயந்து வாழ்ந்ததாலேயே தனது பிள்ளை இதயம் பலவீனமாக பிறந்ததாக சொல்கிறார் பரமேஸ்வரி. இப்பொழுதும் அந்த பிள்ளை கிளினிக்கிற்கு சென்று வருகிறது. இப்பொழுது பிள்ளை ஓரளவு தேறிவிட்டதென்கிறார்.

அளவற்ற குடி, எந்த நேரமும் போதை. விளைவு, இயல்பற்ற மனிதனானான் கணவன். திருமணத்தின் முன்னர் பரமேஸ்வரிக்கு வேறு ஆணுடன் தொடர்பிருந்ததா என கேட்டு அடிக்கத் தொடங்கினான். கற்பனையாக எதையாவது நினைத்துவிட்டு, அதை உண்மையென நம்பி, பரமேஸ்வரியை அடித்து உதைத்தான்.

பரமேஸ்வரிக்கு நடக்கும் சித்திரவதை ஊருக்கே தெரியும். எல்லோரும் அனுதாப்பட்டார்கள். ஆனால் கணவனிடமிருந்து காப்பாற்ற யாராலும் முடியவில்லை.

இறுதியில் தன்னைத்தானே காப்பாற்ற பரமேஸ்வரி கண்டடைந்த வழி விவாகரத்து. நீதிமன்றத்தை நாடினார். வழக்கு தவணைகளிற்கும் கணவன் வருவதில்லை. இதனால் நீதிமன்றம் விரைவிலேயே விவாகரத்து கொடுத்து விட்டதென்கிறார் பரமேஸ்வரி. தாய் மற்றும் எட்டு வயதான மகனுடன் அறையொன்றை வாடகைக்கு எடுத்து குடியிருக்கிறார் பரமேஸ்வரி. தாயுடன் சேர்ந்து சமைக்க செல்கிறார். கோழி வளர்க்கிறார். இந்த வருமானங்கள், சமுர்த்தி உதவியை கொண்டு மகனை படிக்க வைக்கிறார்.

அவர்களது காணியில் வீட்டு திட்டத்தின் மூலம் வீடொன்றை கட்டிக் கொண்டிருக்கிறார். மகனை படிக்க வைக்கவும், மலசலகூடம் அமைக்கவும் யாராவது உதவ வேண்டுமென பரமேஸ்வரி கோருகிறார்.

இனி திருமணமென்பதே வேண்டாம் என்பதில் பரமேஸ்வரி உறுதியாக இருக்கிறார். ஆண்கள் மீதே அவருக்கு அவநம்பிக்கை ஏற்பட காரணம், குடி. ஆணொருவனின் குடிப்பழக்கத்தால் பரமேஸ்வரியின் குடும்பம் வாழ்வெல்லாம் காயத்துடன் பயணிக்கப் போகிறது.


பரமேஸ்வரியின் பிள்ளைக்கு தந்தை பற்றிய சித்திரம் எப்படி அமையும்? எனது அப்பா ஒருகுடிகாரன் என்றா அந்தப்பிள்ளை தனது கதையை தொடங்கும்?

(நீளும்)

## ஸ்மார்ட் விளக்கு


நமக்குத் தேவையான வெளிச்சத்துக்கு ஏற்ப இந்த விளக்கை இயக்கலாம். இந்த விளக்கை ஸ்மார்ட்போனோடு இணைத்துக் கொண்டால், அதிக வெளிச்சம், குறைந்த வெளிச்சம் என நமது தேவைக்கு ஏற்ப இயக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.





## சுற்றுலா விளக்கு

பொதுவாக சுற்றுலா செல்லும் போது விளக்குகள் எடுத்துச் செல்ல முடிவதில்லை. ஆனால் இந்த விளக்கை எவ்வளவு உயரத்தில் உள்ள மலைகளுக்கும் எடுத்து செல்லலாம். மெல்லிய கயிறு போல் இது வடிவமைக்கப் பட்டுள்ளது. இதை ரிமோட் மூலம் இயக்க முடியும்.



## வோலோகொப்டர்

இதுவரை ஹெலிகொப்டர் தான் கேள்விப்பட்டிருக்கிறோம். அதிகரிக்கும் வாகன நெரிசலை போக்க குறிப்பிட்ட உயரத்தில் பறக்குமாறு வோலோகொப்டரை வடிவமைத்துள்ளனர். இதுவும் ஹெலிகொப்டர் போன்றதுதான். பற்றரி மூலம் இயங்குமாறு இது வடிவமைக்கப்பட்டுள்ளது. 20 முதல் 30 நிமிடம் வரை பறக்குமாறு உருவாக்கப்பட்டுள்ளது. இரண்டு பேர் மட்டுமே பயணிக்க முடியும். இந்த வோலோகொப்டரின் மொத்த எடை 450 கிலோ. அதிகமாக 100 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

## சிறிய ஹெட்போன்



போன் பேசும் போதோ அல்லது பாடல் கேட்கும் போதோ புறச் சத்தங்களால் நமக்கு தெளிவாக கேட்காது. இதை தடுப்பதற்காக நொய்ஸ் டெக்னோலஜி என்ற புதிய தொழில் நுட்பத்தை கொண்டு இந்த இயர் போன் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொருவருக்கும் சரியாக பொருந்துமாறு பல்வேறு அளவுகளில் இது வடிவமைக்கப் பட்டுள்ளன. சார்ஜ் ஏற்றிக் கொள்வதற்கு என்று தனியாக ஒரு கருவியை வடிவமைத்துள்ளனர். ஒருதரம் சார்ஜ் ஏற்றிக் கொண்டால் 110 மணி நேரம் இயங்கக்கூடிய திறன் கொண்டது.







## வேக கட்டுப்பாட்டு கருவி

நாம் காரில் செல்லும் போது எந்த பகுதியில் என்ன வேகத்தில் செல்ல வேண்டும் என்பது பற்றி தெரிந்து வைத்திருப்பதில்லை. விபத்துகள் அதிகம் நடப்பதற்கு இதுவும் ஒரு காரணம். ஆனால் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த கருவி அந்தந்த பகுதியில் செல்லவேண்டிய வேகத்தை விட கூடுதலாக சென்றால் அலாரம் மூலம் நமக்கு தகவல் தெரிவிக்கிறது. அதாவது பள்ளிக்கூட இடங்கள், மக்கள் நெருக்கடி அதிகமுள்ள இடங்களில் செல்லவேண்டிய வேகத்தை மீறினால் நமக்கு தகவல் தெரிவிக்கிறது.



## சிறிய ஸ்கூட்டர்

ஸ்கூட்டர் மொடலில் உள்ள இந்த வாகனத்தில் உட்கார்ந்து கொண்டே எங்கு வேண்டுமானாலும் செல்ல முடியும். நான்கு சக்கரம் மட்டும்தான் அடிப்படை மற்றபடி கதிரை, ஸ்டூல் போன்றவற்றை அதனுடன் இணைத்துக் கொள்ள முடியும்.



## புதுவித சார்ஜர்

அப்பிள் ஐபோன்கள் மற்றும் ஸ்மார்ட்போன்களுக்கான புதுவிதமாக தயாரிக்கப்பட்டுள்ள சார்ஜர். மேலும் அப்பிள் ஸ்மார்ட் கடிகாரங்களையும் இதன் மூலம் சார்ஜ் செய்து கொள்ள முடியும். மக்னடிக் முறையில் சார்ஜ் ஏற்றிக் கொள்ளும்படி இது வடிவமைக்கப்பட்டுள்ளது.



## ஸ்மார்ட் ஹெட்போன்

இந்த புதியவகை ஹெட்போன் மூலம் படம்பார்த்துக் கொண்டே இசையையும் கேட்க முடிகிறது. அதாவது. நமது கண்களோடு இந்தக் கருவியை பொருத்திக் கொள்ள வேண்டும். இந்த கருவியின் உள்ளே நமது ஸ்மார்ட்போனை வைத்து படங்களை பார்க்கும் போது தியேட்டரில் படம் பார்க்கும் அனுபவம் நமக்கு கிடைக்கிறது. 4 முதல் 5.5 அங்குலம் வரை டிஸ்பிளே அளவு இருக்கிறது. மேலும் இதன் வழியாக கேட்கும் பொழுது எந்த புறச் சத்தங்களும் நம்மை தொந்தரவு செய்யாத அளவுக்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.



## சைக்கிள் பார்க்கிங்

வீட்டில் சைக்கிளை நிறுத்த இடம் இல்லை என்று இனிமேல் சொல்லத் தேவையில்லை. இந்த கருவியை வீட்டு சுவற்றில் பொருத்திவிட்டால் சைக்கிளை அதன் மீது தூக்கி வைத்துவிடலாம். சைக்கிளின் எடையை தாங்கும் அளவிற்கு இது வடிவமைக்கப்பட்டுள்ளது.



திருமதி ச.கார்த்திஹாயினி
வின்னீஸ் லக்கி
இந்தியன் பியூட்டி பார்லர்
திருநெல்வேலி
Joykarthiha 3014@gmail.com



# கோடையிலும் கூலாகலாம்

வாழைப் பழத்தை மசித்து அதில் பால் சேர்த்துக் கலந்து முகம் மற்றும் கழுத்தில் தடவி 20நிமிடம் ஊறவைத்துக் கழுவ வேண்டும் இப்படி தினமும் 2முறை செய்து வந்தால் இரண்டே நாட்களில் முகத்தின் பொலிவு கூடியிருப்பதை நன்கு காணலாம் .

ரோஸ் வோட்டரில் சிறிது பால் சேர்த்து கலந்து தினமும் இரவில் படுக்கும் முன் தடவி இரவு முழுவதும் ஊறவைத்து மறுநாள் காலையில் கழுவ வேண்டும். இப்படி செய்து வந்தால் முகத்திலுள்ள கருமை நீங்கி முகம் வெள்ளையாக பளிச்சென்று காணப்படும் மாம் பழத்தின் தோலை பால் சேர்த்து அரைத்து பேஸ்ட் செய்து முகம் மற்றும் கழுத்தில் தடவி 20நிமிடம் ஊறவைத்து பின் கழுவ வேண்டும் இப்படி செய்து வந்தால் சூரிய கதிர்களால் கருமையான சருமம் பொலிவோடு மின்னும்

### கோடை வெயிலை சமாளிப்பது எப்படி?

கோடை காலம் தவிர்க்க முடியாதது ஆனால் கோடை வெப்பத்தை நம்மால் தவிர்க்க இயலும். கோடை வந்து விட்டாலே உடம்பில் அலர்ச்சியும் ஆயசமும் கூடவே தண்ணீர்த் தாகமும் ஏற்படுவது இயற்கை. இது போன்ற நேரங்களில் இளநீர் மோர் எலுமிச்சை சாறு தார்ப்பூசணி போன்றவற்றை அருந்துவது நல்லது. இளநீர் மோர் குடித்தால் சிலருக்கு தடிமன் பிடிக்கும் அவ்வாறு இருப்பவர்கள் அவற்றுடன் சிறிது மிளகு தூளை சேர்த்துக் கொண்டால் போதும் எலுமிச்சை சாற்றுடன் சீனிக்கு பதிலாக தேன்சேர்த்துக் கொள்ளலாம்

எந்தப்பழம் சாப்பிடுவதாக இருந்தாலும் ஜுஸாக எடுத்துக் கொள்வதை விட சுவைத்து சாப்பிட்டால் அதன் பலன் இரடடிப்பாகும் கோடைகாளத்தில் அதிகஅளவு தண்ணீர் குடிக்க வேண்டும் நொங்கு சாப்பிடலாம் சுத்தமான மோரில் உப்புப் போட்டு அதிக அளவு அருந்தலாம் கோடையில் மஞ்சள் காமாலை நோய் ஏற்படும் வாய்ப்பு அதிகம் எனவே மோருடன் கீழா நெல்லியை அரைத்து கலந்து காலை வேளையில் வெறும் வயிற்றில் சாப்பிடுவது மிகவும் நல்லது .


முள்ளங்கி கரட் பீட்ரூட் வெள;ளரிக்காய் வாழைத்தண்டு வெள்ளைப் பூசணி புடலங் காய் பீர்க்கங்காய் போன்ற நீர்க்காய்களை சலடாக மிளகுதூள் சிறிதளவு உப்புசேர்த்து சாப்பிடலாம் கோடைகாலங்களில் கனரக ஆலைகளில் வாகனங்களில் பணிபுரிவோருக்கு உடல் அதிக உஷ்ணம் அடைந்து அநேக பிரச்சனைகள் ஏற்படும். இதற்கு சீரகம் வெந்தயம் இரண்டையும் சேர்த்து பொடி சொய்து வைத்துக்கொண்டு மோரில் கலந்து குடித்தால் உடல் குளிர்ச்சியடையும்.

கோடையில் தோல் நோய்கள் அரிப்பு படை சொறி சிரங்கு போன்றவை அதிகமாகஏற்படும் அச்சமயத்தில் குளிக்கும் போது கடலைமா பயத்தம்மா முடிந்தால் சந்தனம் வெட்டிவேர் இவற்றை கலந்து பொடியாக்கி உடல் முழுவதும் தேய்துக்குளிக்க வேண்டும். ஈரமான ஆடைகளை அணியக்கூடாது உடல் ஈரத்துடனும் ஆடைகளை அணியக்கூடாது கோடை காலத்தில் பருத்தி ஆடைகளே சிறந்தது காலை மாலை இரண்டு வேளைகளிலும் குளிர்ந்த நீரில் குளிக்க வேண்டும். கிழமையில் இரண்டு நாட்கள் எண்ணை தேய்த்து தலையில் குளிக்க வேண்டும் ஒரு நாள் விட்டு ஒருநாள் இரவு வெந்தயத்தை மோரில் ஊறவைத்து அரைத்து மறுநாள் காலை தலைக்குப்பூசி குளித்து வந்தால் குளிர்ச்சியாக இருக்கும் .

கோடை காலத்தில் தொடர்ந்து 2மணி நேரத்துக்கு மேல் வெயிலில் இருப்பதை தவிர்க்க வேண்டும். பகல் 11மணியிலிருந்து மாலை 4மணி வரை வெயிலில் செல்லாமல் இருப்பது நல்லது. கைவசம் சுத்தமான தண்ணீர் எடுத்துக் கொள்வேண்டியது மிக மிக முக்கியம். காற்றோட்டமான கதர் பருத்தி ஆடைகளை அணிவது நல்லது. இறுக்கமான ஆடைகளைத் தவித்து தளர்வான ஆடைகளை அணிய வேண்டியது முக்கியம் .

ஒவ்வொரு வருடமும் அதிகரித்து வரும் வெயில் ஒருசவால்தான் ஆனால் அதிலிருக்கும் ஆபத்துகளை முழுமையாகப் புரிந்து கொண்டால் அதன் பாதிப்புகளிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும் நம் ஆதோக்கியம் நம் கையில் .

தொடரும்...








# எளிமையான அழங்காரம்

வீடு என்பது வெறும் செங்கலாலும் மணலாலும் கட்டப்பட்டதல்ல. அது உணர்வாலும் அன்பாலும் கட்டப்பட்டது என்பார்கள். சம்பாதிப்பதைக் காட்டிலும் அதைப் பயனுள்ள முறையில் செலவிடுவதிலும் சேமிப்பதிலும்தான் இருக்கிறது சாமர்த்தியம். அதைப் போல்தான் வீட்டைப் பராமரிப்பதும் அழகுபடுத்துவதும்.

வீட்டை அழுகுபடுத்த அலங்காரப் பொருள்களை வாங்கி அடுக்கினால் மட்டும் போதாது. அள்ளி இரைத்து விடவும் கூடாது. அடுத்த வீட்டில் பார்த்தேன். உறவினர் வீட்டில் பார்த்தேன் என்று வாங்கிக் குவிக்கக் கூடாது. அந்தப் பொருள்கள் நம் வீட்டிற்குப் பொருத்தமானதாக இருக்க வேண்டும்.

வீடு வீடாய் இருக்க வேண்டும். வீடு அலுவலகம் போல் இருப்பதாகச் சிலர் ஆதங்கப்படுவதும் உண்டு. பழமையை மனம் விரும்புகிறது. வீட்டை அலங்கரிக்க ஆசை இருந்தாலும் வாங்கும் பொருள்களின் விலையைப் பார்த்து விலகி ஓடுவார்கள். சிலருக்கு அதைச் சுத்தப்படுத்திப் பராமரிக்கும் வேலையை நினைத்தாலேயே அலுப்பு வந்துவிடும். விலையும் குறைவாக இருக்க வேண்டும். உள்ளத்தைக் கொள்ளை கொண்டு போவதாக இருக்க வேண்டும். இதற்கு என்ன செய்யலாம்?

டெரகோட்டா என்னும் சுடும் மணலில் செய்த பொருள்களைக் கொண்டு அழுகுபடுத்தலாம். முன்பெல்லாம் அகல்விளக்கும், மண் தொட்டியும்தான் கிடைக்கும். இப்போது நகைகள்கூடச் செய்கிறார்கள். மிக நுணுக்கமான வேலைப்பாடுகள் கொண்ட கலை நயம் மிக்க பொருள்கள் கிடைக்கின்றன. குதிரை முகம், முழுக் குதிரை, மான், விநாயகர் சிலைகள், புத்தர் சிலைகள், சூரியன் முகம், பல விதமான விளக்குகள், மணிச் சக்கரங்கள் எனப் பல அழகுப் பொருள்கள் கிடைக்கின்றன.

வீட்டிற்குள்ளும் வெளியே தோட்டத்திலும் புல் தரையிலும் ஒரே மாதிரி அழகுபடுத்த டெரகோட்டாவைவிடச் சிறந்தது வேறு எதுவும் இல்லை. பராமரிப்பதும் எளிது. சிறிய பிரஷ் கொண்டு துடைத்தாலேயே போதுமானது. புல் தரையில் அமைக்கும்போது வெயிலையும் மழையும் தாக்குப் பிடிக்கும்படி இது இருக்கும். தேவைப்படும்போது மீண்டும் வண்ணம் பூசிக் கொள்ளலாம்.



# மாதவிடாய்க்கு முன்னர் வலியால் அவதியுறுகிறீர்களா?

பெண்கள் திடீரென்று சில நாட்களாகக் காரணமில்லாமல் எரிந்து விழுவது வயிற்று வலி, தலைவலி, கோபப்படுவது, டிப்ரஷன், டென்ஷன் இவையனைத்தும் மாதவிடாயின் முன்பு அவர்களுக்கு ஏற்படும் பிரச்னைகளின் பிரதிபலிப்பு. ஹார்மோனின் வேலைகள்தான். Premenstrual syndrome .அதாவது, மாதவிடாயின் சில நாட்களுக்கு முன்பு ஏற்படும் சில அசௌகரியங்கள். அதற்கு பின்பு இருக்கும் மருத்துவ உண்மைகள், அதற்கான தீர்வுகள் பற்றிய விளக்கம்.

சினை முட்டையை உற்பத்தி செய்கிற ஒவ்வொரு பெண்ணும், மாதவிடாய்க்கு முன்பு சில மாற்றங்களை அனுபவிக்கிறாள். மார்பக வலி, வீக்கம், தலைவலி, மனச்சோர்வு, தசைப்பிடிப்பு, எரிச்சல் போன்ற அறிகுறிகள் மாதவிடாய்க்கு முன்பு இருக்கும். இதனை மருத்துவம் Premenstrual syndrome என்கிறது. அதிக சதவிகிதப் பெண்கள் உடலால் மட்டுமின்றி மனதளவில் பாதிக்கப்படுகிறார்கள். இதனால் தொடர்ந்து சில நாட்கள் அவர்களுடைய இயல்பு வாழ்க்கைப் பெரிதும் பாதிப்படைகிறது. முன்பெல்லாம் இதைச் சகித்துக் கொண்டு இயல்பு வாழ்க்கையைத் தொடரவேண்டிய கட்டாயம் இருந்தது. ஆனால், இன்றைய மருத்துவத்தில் இதற்குத் தேவையான மருந்துகள் வந்தாகிவிட்டது. மாதவிடாய்க்கு முந்தைய நாட்களில், அவதிகள் காரணமாக பெண்கள் தங்கள் வேலைக்கோ, குடும்ப உறவுகளிலோ எந்தவித இடையூறுகளும் வராமல் ஜாலியாகச் சமாளிக்கலாம் என்கிறார்கள் நிபுணர்கள்.

மாதவிடாய் ஏற்படுவதற்கு முன்பு, பெரும்பாலான பெண்கள் மார்பகங்களில் கனமான உணர்வு அல்லது மார்பக வலி இருப்பதை அனுபவித்திருப்பார்கள். இதற்கு அடிப்படைக் காரணம், ஈஸ்ட்ரோஜன் அளவு அதிகமாவதுதான். செல் அணுக்களில் நீர் தேங்கலால், உடலில் வெயிட்போட்டு விட்டது போல கனமான உணர்வு தோன்றுகிறது. தலைவலி சர்வ சாதாரணமாகப் பலருக்கும் இருக்கும். இளம் பெண்களின் ஒற்றைத் தலைவலிக்குக் காரணம், இந்த ஹார்மோனல் இம்பேலன்ஸ் தான். மேலும் பீரியட்ஸ் சமயத்தின் சில நாட்களுக்கு முன்பு முகப்பருக்கள் வரத் தொடங்கும். ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன், என்ட்ரோஜன் ஹார்மோன் அளவை மாற்றி, முகப்பருக்களைப் பருக்க வைத்துவிடும்.

உடலில் ஏற்படும் இந்தப் பிரச்னைகளின் பிரதிபலிப்பு உடல் சோர்வையும், மனப்பிரச்னைகளையும் கொடுக்கும். காரணமில்லாமல் எரிந்து விழுதல், அமைதியின்மை, மனக்கவலை, திடீரென்று அழுதல் என்று ஒரு கட்டுப்பாடு இல்லாமல் தங்கள் உணர்ச்சிகளை மற்றவர்களிடம் பிரதிபலிப்பார்கள். வீட்டில் உள்ளவர்களும், கணவர்களும் இந்த நேரத்தில் அவர்களைப் புரிந்து கொண்டு அன்பாக நடந்து கொள்வதே அவர்களுக்குச்செய்யும் மிகப் பெரிய உதவியாக இருக்கும். பெண்களின் இந்தப் பிரச்னையைப் புரிந்து கொள்ளாமல், அவர்களுடன் போட்டி போட்டுக் கொண்டு சண்டை போட்டால், அவர்களுடைய உடல் நலம் தேவையில்லாமல் பாதிக்கப்பட்டு விடும்.

மாதவிலக்கு ஏற்படுவதற்கு ஓரிரு நாட்கள் முன்பு அடிவயிற்றிலும், பக்கவாட்டிலும் சற்று கனமான உணர்வு, சூடு தெரியும். இதை வைத்தே தீட்டு ஏற்பட இருக்கிறது என்பதைப் பெரும்பாலும் எல்லாப் பெண்களும் அறிந்திருப்பார்கள். இதற்குக் காரணம் கருப்பையிலும், கரு முட்டையிலும் ஏற்படும் அதிக இரத்த ஓட்டம்தான். சிலருக்கு வயிற்று வலி படாய்ப்படுத்தும். திடீரென்று ஏற்படும் வயிற்றுவலி, சிலரை மயக்கமடையக் கூடச் செய்துவிடும். வலியால் சுருண்டு விடுவார்கள். நாக்கு வறண்டு போதல், வியர்வை, தலைசுற்றல் கூட இருக்கலாம். மாதவிலக்கு ஏற்பட்டவுடன் வலி படிப்படியாகக் குறையலாம். கையால் பிசைவது போல வலி இருந்தால் அது கருப்பை அதிகமாக சுருங்கி விரிவதால்தான் இருக்கும். கருப்பையின் உட்சுவர் சீராகச் சிதையாமல், தாறுமாறாகச் சிதைவதால் சிலருக்கு வலியை ஏற்படுத்தலாம். தாங்கமுடியாத வலி இருந்தால் மட்டுமே மருத்துவரின் ஆலோசனையின் படி வலி நிவாரணிகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு சில பெண்களுக்கு கருப்பையில் கட்டிகள், கரு முட்டைப் பையில் நீர்க் கட்டிகள் போன்றவை இருந்தால் கொஞ்சம் சீரியஸ் கவனம் தேவை. கருப்பையின் உட்சுவர் திசுக்கள் கருப்பையினுள் வளர்வதுண்டு. அதேபோல, சினைக்குழாய், சினை முட்டைப்பை, வயிற்றுப் பகுதி போன்ற பகுதிகளாக வளர்ந்து 'எண்டோமிட்ரியோஸிஸ்' எனப்படும் தொந்தரவுகளுக்கு ஆளாகலாம். எண்டோ மிட்ரியோஸிஸ் தீவிரமடைந்து சிறு குடலைப் பாதிக்கும்போதுதான் மாதவிடாயின் போது வாந்தி, பேதி ஏற்பட்டுவிடுகிறது. எனவே, மாதவிடாயின் போது இதுபோன்ற தீவிர பிரச்சினைகள் இருந்தால், அதைத் தள்ளிப் போடக் கூடாது. இதனால்கூட மாதவிடாயின் போது தீராத வலி ஏற்படும். இதுபோன்ற பிரச்னைகளுக்கு சிகிச்சைகள் அவசியம்!

பொதுவாகத் தீட்டுக் கோளாறுகள் என்று நீங்கள் மருத்துவரை அணுகினால் அவர் ஹார்மோனல், இம்பாலன்ஸ் என்றுதான் குறிப்பிடுவார். இந்த ஹார்மோனல் இம்பாலன்ஸ் என்பது, ஈஸ்ட்ரோஜன், புரொஜெஸ்ட்ரோன்ஹார்மோன்களின் குறையினைக் குறிக்கிறது. இந்த ஹார்மோன்களின் செயல்பாட்டை, மூளையின் அடிபாகத்தில் உள்ள பிட்யூட்டரி எனப்படும் சுரப்பி கட்டுப்படுத்துகிறது. அதுமட்டுமல்ல, இந்த பிட்யூட்டரி சுரப்பியின் இயக்கத்தைக் கட்டுப்படுத்துவது, 'ஹைம்போதலாமஸ்' எனப்படும் மூளையின் ஒரு பகுதி, இந்தப் பகுதி, உடலின் தேவையை அறிந்து அவ்வப்போது பிட்யூட்டரிக்கு கட்டளையிட்டுக் கட்டுப்படுத்தும்! சாதாரணமாக ஏற்படும் மன பயம், அதிர்ச்சி போன்றவை மாதவிலக்கால் சற்று மாற்றங்களை ஏற்படுத்தக் காரணமாக இருப்பது, இந்த 'ஹைபோதலாமஸ்' எனும் பகுதி தான்! பொதுவாக, தீட்டுக் கோளாறுகளுக்கு மருத்துவர் அளிக்கும் பரிசோதனைச் சீட்டுகளைப் பாருங்கள், இந்த ஹார்மோன்களின் நிர்ணயப் பரிசோதனையாகத்தான் இருக்கும். பொதுவாக, மாதவிடாய் ஏற்படவும், முட்டை நல்ல ஆரோக்யமாக வெளிவர... சினைமுட்டைப்பை, பிட்யூட்டரி, ஹைப்போதலாமஸ் மற்றும் கருப்பை போன்றவற்றின் ஒத்துழைப்பு ஒன்றுக்கொன்று சீராக இருக்க வேண்டும். இதில் எந்த ஒரு உறுப்பில் கோளாறு ஏற்பட்டாலும் தீட்டுக் கோளாறுகள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

மாதவிலக்கின் முன்பு ஏற்படக்கூடிய இந்த அறிகுறிகளில் ஏற்படும் பிரச்னைகளை உட்கொள்ளும் உணவின் மூலமாகத் தீர்வுக் காணலாம். சரி... என்ன செய்யலாம்?

கொழுப்புச் சத்துள்ள உணவுகள் PMS (Pre menstrual syndome) அறிகுறிகளை அதிகப்படுத்தும். குறைவான கொழுப்புள்ள உணவு வகைகளை உட்கொள்ள வேண்டும்.

உப்பு அதிகம் சேர்ந்த ஊறுகாய், நொறுக்குத் தீனி வகைகளை ஒதுக்கிவிட வேண்டும். ஐஸ்க்ரீம்களை ஒரு பிடி பிடித்தால் நன்றாக இருக்குமே என்று படும். சாக்லெட், சிப்ஸ் போன்றவற்றை ஒரு வெட்டு வெட்டத் தோன்றும். இருந்தாலும் இனிப்புக் குறைவாக உள்ள உணவுகளைச் சாப்பிடுவதே நல்லது.

மாதவிடாய் நாட்களுக்கு ஒரு வாரம் முன்பு, இருபது நிமிட வாக்கிங் பழகிக்கொண்டால் மனரீதியான பாதிப்புகளைக் குறைக்கலாம்.

காபி, டீ போன்ற பானங்களைத் தவிர்க்கலாம். தினமும் இரண்டு கப்பிற்கு மேல் காபி, டீ, குடிக்கும் பெண்கள் சாதாரணப் பெண்களைவிட ஏழுமடங்கு PMS ஆல் அவதிப்படுவார்கள் என்கிறார்கள், ஆராச்சியாளர்கள். காபியில் உள்ள காஃபின் பதற்றத்தையும் எரிச்சலையும் அதிகப்படுத்தும்.




**7_8 மணி நேரம் உறக்கம் கட்டாயம்.**

இந்தச் சமயத்தில் வைட்டமின் ஏ,டி அவசியம். இவை அதிகம் உள்ள கேரட், பசளைக்கீரை, பால் போன்றவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்! மார்பக வலி, களைப்பு போன்றவற்றிலிருந்து நிவாரணம் பெற, வைட்டமின் பி6 உதவும். மீன், கோழி, வாழை, உருளை போன்றவை வைட்டமின் பி6 உள்ள உணவுகள். மன அழுத்தம் நீங்க வைட்டமின் 'சி' உள்ள ஆரஞ்சு, திராட்சை, எலுமிச்சை சேர்த்துக் கொள்ளுங்கள்! இந்த உணவுப் பழக்கங்களை மாதவிடாயின் ஒரு வாரத்துக்கு முன்பும், மாதவிடாயின் போதும் கடைப்பிடித்தல் நல்லது!






# செய்யும் கருமத்தில் கண்ணாயிருங்கள்

## நாவற்குழி பரமேஸ்வரனின் அனுபவங்கள்

ஒன்பது சகோதரர்களுடன் பிறந்து தந்தையின் இழப்புக் காரணமாக ஐந்தாம் வகுப்புடன் கல்வியை இடைநிறுத்தி விட்டு கொழும்புக்குப் பன்னிரண்டு வயதில் கராச் வேலைக்குச் சென்ற சிறுவன் பல வருடங்களின் பின்னர் ஊருக்கு திரும்பும் போது தொழிலதிபர் மற்றும் கார் ஓட்டப் பந்தய வீரன்.

நாவற்குழியை சேர்ந்த க.பரமேஸ்வரன் தானின் வெற்றிக்கதை இது. நாவற்குழி சந்தியில் அமைந்துள்ள "பேர்ள் உணவகம்" உரிமையாளர். வெற்றிப்படிக்கட்டுகளிற்காக அவரை சந்தித்தோம்.

"நாவற்குழியில் ஒன்பது பிள்ளைகளை கொண்ட குடும்பத்தில் ஏழாவதாக பிறந்தேன். ஆரம்பக் கல்வியை நாவற்குழி மகாவித்தியாலயத்தில் கற்றேன். 5 ஆம் ஆண்டு கற்றுக் கொண்டிருக்கும் போது தந்தையை இழந்தேன். அதன் பின்னர் குடும்பச்சுமையை நாங்கள் சுமந்தோம். எனது அண்ணன் முறையான பாலசிங்கம் என்பவரோடு கொழும்பிற்கு சென்று கராஜ் வேலையில் சேர்ந்தேன்.

1972இல் கார்ப்பந்தயத்தை பார்த்ததிலிருந்து அதில் ஈடுபாடு ஏற்பட்டு விட்டது. அந்த சமயத்தில் குடும்பநிலை, பணவசதி போன்ற விடயங்களினால் வெறும்பார்வையாளனாக மட்டுமே இருந்தேன்.

15வது வயதில் நாவற்குழிக்கு திரும்பி வந்தேன். கைதடியில் இருந்த கராஜ் ஒன்றில் வேலைக்கு சேர்ந்தேன். 1987 வரை அங்கேயே வேலை செய்தேன். இந்த சமயத்தில் 1980 1987 ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடந்த சைக்கிளோட்ட பந்தயங்களில் பங்குபற்றியிருக்கிறேன்.

1987இல் மீண்டும் யுத்தம் ஏற்பட கொழும்புக்கு சென்றேன். அதற்கு அடுத்த வருடம் கப்பல் வேலைக்காக வெளிநாடு சென்றேன். 1991 வரை அங்கு வேலைசெய்துவிட்டு, கொழும்பு திரும்பி ஹோட்டல் ஒன்றை எடுத்து நடத்தினேன்.

1998இல் மினிகார் ஒன்றை வாங்கி கார் பந்தயத்தில் இறங்கினேன். 2000 ம் ஆண்டு, காலி மாவட்டத்தின் கொக்கலை என்ற இடத்தில் நடந்த பந்தயத்தில் என கன்னிப்பந்தயத்தில் கலந்து கொண்டேன். நானும் அண்ணன் பாலசிங்கமும் கலந்து கொண்டோம். நான்காவது இடத்தை பெற்றேன்" என கடந்த காலத்தை நினைவுபடுத்தினார்.

கடந்த 16 வருடங்களாக பரமேஸ்வரன் கார் ஓட்டப்பந்தயத்தில் பங்குபற்றி வருகிறார். இந்த வருடம் புதுவருடத்தை ஒட்டி பண்டாரவளையில் 8 பேர் பங்குபற்றிய கார்ப் பந்தயத்தில் பங்குபற்றி 1 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

விளையாட்டு, வியாபாரம் இந்த இரண்டையும் எப்படி சமாளிக்கிறீர்கள் என்று கேட்டால், "விளையாட்டு வீரன் என்றால் அவன் விளையாட்டுத்தொடர்பான பயிற்சிகள், ஓய்வுகள் என்பவற்றை பேண வேண்டும். எனக்கு இவ் விடயத்தில் எனது குடும்பத்தில் இருந்து நிறைய ஒத்துழைப்பு உள்ளது. எனக்கு 5 பிள்ளைகள். அவர்கள் அனைவரும் நல்ல நிலையில் உள்ளார்கள். உதாரணமாக இம்முறை இடம் பெற்ற போட்டியில் பங்குபற்றுவதற்கு முதல் நாள் யாழ்ப்பாணத்தில் உள்ள எனது வியாபார நிலையத்தில் நின்றிருந்தேன்.

எனது போட்டி நாளான மறுநாள் அன்று எனது வியாபார நிலையத்தில் எனக்கு முக்கியமான வேலை இருந்தது. இருந்தாலும் வியாபார நிலையத்தில் உள்ள பெறுப்பானவர்கள், ஊழியர்களிடம் நம்பிக்கையுடன் அவ் வேலைகளை ஒப்படைத்து விட்டு போட்டிக்கு நான் சென்றேன். போட்டியிலும் வென்றேன். அன்று எனது வியாபார நிலையத்திலும் இனிதே பணிகளும் நிறைவடைந்தன. ஆகவே நாங்கள் எந்த நேரத்தில் ஒரு காரியத்தை செய்யப் போகிறோமோ அந்த விடயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தால் அந்த விடயம் சிறப்பாக வெற்றி பெறும்" என்றார்.

தீபத்தின் இந்த மாபெரும் பரிசுத்திட்டத்தில் சரியான விடையெழுதி வெற்றியாளர் ஆகும் வாய்ப்பை இன்றே உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

தீபத்தின் பரிசு மழை

கேள்வி

புளுட்டோ சூரியனை ஒருமுறை சுற்ற எடுக்கும் காலம்?

பதில் : ..........

பெயர் : ..........

முகவரி : ..........

தொ.பே : ..........

இந்த கூப்பனை வெட்டி நிரப்பி எமது அலுவலக முகவரிக்கு தபாலிலோ அல்லது நிரப்பப்பட்ட கூப்பனை புகைப்படம் எடுத்து facebook/DeepamNews என்ற முகபுத்தகத்தினூடாக எமக்கு அனுப்பவும்.

வெற்றியாளர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

06

முடிவு திகதி : 12.05.2016

இல. 211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 221 6633



அரச நடனப்போட்டி தொடரில் தேசிய மட்ட சிரேஷ்ட பிரிவு செம்பு நடனப்போட்டியில் பெரிய போரதீவு பாரதி வித்தியாலய மாணவிகள் முதலிடத்தை பெற்றுள்ளனர்.

தீபத்தின் பரிசு மழை

சென்ற வார வெற்றியாளர்கள்

மேரி யெறோஸ் பிரேமிளா

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி

கேள்வி

அமெரிக்காவின் தேசிய விளையாட்டு எது?

பதில்

கை எறி பந்து (Base Ball)



ஜே.சத்தியேந்திரன்
தென்னை அபிவிருத்தி
உத்தியோகத்தர், கிளிநொச்சி
0775056263



# தென்னை ஆராய்ச்சி நிலையம்



**தென்னை ஆராய்ச்சி நிலையம்.**
(coconut research institute)

இலங்கையின் தென்னை ஆராய்ச்சி நிலையமானது "லுணுவில" இல் உள்ள பண்டிருப்புவ என்னும் இடத்தில் அமைந்துள்ளது. இதனைவிட புதிய தென்னை ஆராய்ச்சி உபநிலையம் (MRC) (Miththeniya research centre) 2005 ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. இது எம்பிலிப்பிட்டிய தங்காலை வீதியில் மித்தெனிய அரச பண்ணைக்கு சமீபமாக உள்ளது.

தென்னை ஆராய்ச்சி நிலையத்தின் ஆரம்ப செயற்பாடுகளாக தென்னை அபிவிருத்தியினை ஊக்குவிப்பதற்காக ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அதன் முடிவுகளையும், அத்துடன் தென்னைக்கு கீழே வளர்க்கப்படும் ஊடுபயிர்ச்சேய்கை முறைகளையும், மற்றும் பூச்சி நோய்த் தாக்கங்களையும் ஆராய்ச்சி செய்து, பரிகார முறையுடன் கூடிய அபிவிருத்தி செய்தல் பற்றிய முடிவுகளையும் தென்னை பயிற்சேய்கை சபையினூடாக தென்னை செய்கையாளருக்கு வழங்குதல்.

**சேவைகள்.**

- பெருந்தோட்டங்களுக்கு (20 ஹெக்டருக்கு மேல்) நேரடியாக ஆலோசனை வழங்கல்.
- பல்வேறு வகைப்பட்ட உரச் சிபார்சுகளை மண்ணின் தன்மையையும் ஓலையின் பகுப்பாய்வினையும் பொறுத்து ஆராய்ச்சி செய்து முடிவுகளை வெளியிடல்.
- திருத்திய வர்க்க விதைத் தேங்காய்களை, தென்னைப் பயிர்ச்சேய்கை சபைக்கு வழங்கி அதனை மக்களுக்கு குறுகிய காலத்தில் பலன் தரக்கூடிய தென்னங் கன்றுகளாக (Hybrid kapsutha) மக்களுக்கு விநியோகம் செய்தல்.
- ஆராய்ச்சி செய்த புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்துவதற்காக பயிற்சித் திட்டங்களை மேற்கொள்ளல்.
- தென்னைச் சேய்கை சம்பந்தமான பல்வேறு வகையான கள ஆய்வுகளை பயிற்சி வகுப்பினூடாகவும், செயல்முறைக் கருத்தரங்கின் ஊடாகவும் வெளிப் படுத்தல், சேவைக்கால பயிற்சி வகுப்புக் களை நாட்டிலுள்ள சகல தென்னைப் பயிர்ச்சேய்கைச் சபை பிராந்திய, உதவிப் பிராந்திய முகாமையாளர், தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கள உதவியாளர்கள், நாற்று மேடை பெறுப்பதிகாரிகளுக்கு அழித்தல்.
- தெங்கு சம்பந்தமான பிரச்சினைகளுக்கு விசேட பயிற்றப்பட்ட வழிகாட்டி மூலம் சேவை அளித்தல்,
- பயிர்ப் பாதுகாப்பு சேவை, உயிரினவியல் கட்டுப்பாடு உட்பட்ட எல்லா விதமான பீடை நோய்க் கட்டுப்பாடுகளையும் உடனடியாக மேற்கொள்ளல்.
- ஆராய்ச்சி செய்த முடிவுகளை அறிவுச் சிற்றறிக்கை வெளியீடுகள் மூலம் வழங்குதல்.

**தெங்கு அபிவிருத்தி அதிகார சபை**
(coconut development authority)

இது கொழும்பு நாரஹென்பிற்ற நாவல் இல் அமைந்துள்ளது.

நோக்கங்கள்:

- குறைந்த மூலதனத்தைக் கொண்டு கிராமப் புறங்களில் தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல்,
- திடமான எண்ணக்கருக்களின் ஊடாக அபிவிருத்தி மூலம் கிராமிய கூட்டு முயற்சியாளர்களை உருவாக்குதல்.
- கூடிய கவனம் செலுத்தப்படாத சிரட்டை, தென்னம் மட்டை போன்ற வளங்களில் மேலதிக வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியுமான வழிகளை உருவாக்குதல்.
- உயர்ந்த தரத்துடன் கூடிய உற்பத்திகளைச் சந்தைக்கு அனுப்புதல்.
- வலையமைப்புடன் கூடிய வலுவான சந்தையை உருவாக்குதல்.
- மனங்கவரும் சுற்றுலாத்துறை சந்தையினை உருவாக்குதல்.

**நடைமுறைப்படுத்த முடியுமான கருத்திட்டங்கள்:**

- மனை சார்ந்த தேங்காய் எண்ணெய்த் தொழில்.
- மனை சார்ந்த சிரட்டை சேர்த்தல்.
- மனை சார்ந்த தும்பு மற்றும் விளக்குமாறு உற்பத்தி
- மனை சார்ந்த தும்பு உற்பத்தி கருத் திட்டங்கள்.
- மனை சார்ந்த இனிப்புப் பண்டங்களின் உற்பத்தி.

**தெங்கு அபிவிருத்தி அதிகார சபை வழங்கும் பிரதான சேவைகள், நிதியுதவிகள்:**

01. தெங்கு கைத்தொழில் அபிவிருத்தி சம்பந்தமாகவும், நவீனமயப்படுத்தவும், அடிப்படை நிதியுதவியினைப் பெற்றுக் கொடுத்தல், நவீன தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்தல்.
02. உலர்த்திய தேங்காய் கைத்தொழில் நிலையங்களில் மேற்கொள்ளப்படும் சுகாதார முறைகளை மேம்படுத்துவது, உற்பத்தியின் தரத்தினை விருத்தி செய்வது, பதனிடும் வசதிகளை அபிவிருத்தி செய்தலுக்கு, கைத்தொழில் நிறுவனங்களின் உற்பத்தி ஆலோசனை முறையின் கீழ் நிதியுதவி வழங்கல்.
03. தேங்காய்த் தும்புத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல் சம்பந்தமான அடிப் படை நிதியுதவி அளித்தலும், நிறுவுதலும், மின்சாரம் பெற்றுத் தருவதற்காக தேவையான இயந்திரங்களை பெற்றுக் கொள்ளவதற்கும், கடனுதவி வழங்கல்.
04. குடிசைக் கைத்தொழிலில் முன்னேற்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கயிறு திரித்தல், இயந்திரங்களைப் பெற்றுக் கொடுத்தல்.
05. தெங்கு கைத்தொழில் தொழிற்பாடு குறையும்காலங்களில் வேலையாட்களுக்கு சம்பள நிவாரணம், பெற்றுக் கொடுக்கும் முறையினை அமுல்ப்படுத்தல்.
06. உலர்த்திய தேங்காய் உற்பத்தியாளர் களுக்கான தொழிற்பாட்டு நிதி உதவியினை கடனை 10 வீதம் வட்டிவரை அதிகாரச் சபையால் ஏற்றுக்கொள்ளும் முறையில் வங்கிக் கடனை பெற்றுத் தரும்.
07. சிறிய அளவிலான கைத்தொழில்களுக்கும் கிராமிய கைத்தொழிலாளருக்கும், பயிற்சியினைப் பெற்றுத் தருவதற்கு வசதியினை ஏற்படுத்திக் கொடுத்தல்.
08. தென்னந்தும்பு சம்பந்தமான உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கான தேவையான அடிப்படை நிதியுதவியினைப் பெற்றுக் கொடுத்தல்.

**திட்டங்கள்:**

- கலப்படமற்ற தேங்காய் எண்ணெயினை பாவனையாளர்களுக்கு பெற்றுத்தர விசேட திட்டமொன்றை அமுல்படுத்தல்.
- பிகிசிசிறி தரச்சான்றிதழ் முறையினை உலர்த்திய தேங்காய் தொழிற்சாலை களுக்கு அறிமுகப்படுத்துவதற்காக நிகழ்ச்சி நிரலை அமுல்படுத்தல்.

**தொழிற்பாடுகள்.**

- அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு ஏற்ற மாதிரி கொள்கை வரையறுத்தல்.
- தகரக் கட்டுப்பாடு, தேங்காய் உற்பத்திப் பொருட்களின் புதிய தொழில்நுட்பம் என்பனவற்றை அபிவிருத்தி செய்தல்.
- தெங்கு பொருட்களிலிருந்து பல்வேறு வகையான பொருட்களையும், உற்பத்தி செய்வதற்கு திறமையான அமைப்புக் களையும், உருவாக்கி வழிகாட்டல்.
- சர்வதேச தரத்தில் தெங்கு உற்பத்திப் பொருட்கள் சம்பந்தமான கண்காட்சி போன்றவற்றில் பங்குபற்றல்.
- தெங்கு உற்பத்திப் பொருட்களை கூட்டுறவு முறை மூலம் முகாமைப்படுத்தி உற்பத்தியாக்க உற்சாகமளித்தல்.
- தெங்கு உற்பத்திப் பொருட்களுக்கு விலைத் தழும்பில் இல்லாது விலை நிர்ணயத் திட்டத்தினை ஏற்படுத்தி சந்தை வாய்ப்பு வலையினை தெங்குச் செய்கையாளர்களுக்கு வழங்கல்.
- உள்ளூர், வெளியூர் சந்தை வாய்ப்பினை அரசாங்க கொள்கைகளுக்கு ஏற்ப நிறைவேற்றச் செய்தல்.





வாகரை பிரதேச செயலகத்திற்குட்பட்ட புச்சாக்கேணி கிராமத்தில் இயற்கைமுறையில் விளைவிக்கப்பட்ட நஞ்சற்ற காய்கறிகள் விற்பனை செய்யும் நிலையமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.



## பிரமிட்

# கோட், சூட் போட்ட திருடர்கள் அவதானம்!

வண்டுமுருகன்

உங்கள் நெருங்கிய நண்பராக இருப்பார்ஞ் உறவினராக இருப்பார். திடீரென போன் செய்து, ஆறுதலாக பேச வேண்டுமென்பார். தனிமையில் உங்களை அழைத்து செல்வார். அங்கு நாகரிகமாக உடையணிந்த இன்னொருவர் இருப்பார். அவர் பேசத் தொடங்குவார்.

'எங்கட கொம்பனியில ஒரு பொருளை வாங்கணும். பிறகு இன்னும் இரண்டு பேரை சேர்க்கணும். அவர்கள் இன்னும் இரண்டு பேரை சேர்க்கணும். அவர்கள் ஆட்களை சேர்க்க, பொருள் வாங்க ஓட்டமற்றிக்கா உங்களிற்கு காசு வரும். நானெல்லாம் மூன்று வருசத்துக்கு முதல் சேர்ந்தனான். இப்ப சொந்தமாக கார் எடுத்திட்டன்' என்ற ரீதியில் பேசிக்கொண்டே போவார்.

ஆரம்பத்தில் உங்களிற்கு சற்று குழப்பமாக இருக்கும். ஆனால் போகப்போக அவர் சொல்வதை நீங்கள் நம்ப ஆரம்பித்துவிடுவீர்கள். இதுதான் நீங்கள் சறுக்க ஆரம்பிக்கும் புள்ளி.

ஆம். தற்பொழுது வடபகுதியை உலுப்பிக் கொண்டு இருக்கின்றது பிரமிட் எனப்படும் பணமோசடிக் கும்பலின் வியாபாரம் பற்றியே பேசுகிறோம்.

முக்கியத்துவம் இல்லாத பொருட்களையும் பெறுமதி குறைந்த பொருட்களையும் உங்கள் தலையில் மிளகாய் அரைத்து அதி கூடிய விலைக்கு விற்பதே இந்ததிட்டம்.

ஒரு பொருளை வாடிக்கையாளர் ஒருவருக்கு விற்பனை செய்யும் போது அந்த வாடிக்கையாளர் அப் பொருளை வாங்கிய பின்னர் அந்த நிறுவனத்திற்கு இன்னும் சிலரை அறிமுகப்படுத்தி அந்தப் பொருளை வாங்கச் செய்தால் குறித்த வாடிக்கையாளருக்கு எத்தனை பேரைச் சேர்த்தாரோ அதற்கு அவருக்கு குறிப்பட்ட பணம் வழங்கப்படும் என இந்த திட்டத்தில் கூறப்படுகிறது.

அத்துடன் அப் பொருளை ஏனையவர்கள் வாங்கினாலும் உடனடியாக அவருக்கு பணம் கிடைக்காது எனத் தெரிவித்து குறித்த புள்ளிகள் எடுத்தாலே பணம் கிடைக்கும் என கூறுகின்றனர். இதை நம்பி பொருட்களை வாங்கும் வாடிக்கையாளர்கள் மேலும் சிலரை அறிமுகப்படுத்தி பொருட்களை வாங்கச் செய்கின்றனர்.

அவ்வாறு வாங்குபவர்களும் தமக்குத் தெரிந்தவர்களுக்கும் உறவினர்களுக்கும் அப் பொருளை வாங்கச் சொல்லியும் இவ்வாறான பிரமிட் முறையால் இலட்சக்கணக்காக உழைக்கலாம் எனவும் ஆசை வார்த்தை காட்டி தொல்லைப் படுத்துகின்றனர்.

உதாரணமாக ஒரு சூரிய மின்கலத்தின் பெறுமதி 25 ஆயிரம் ரூபா எனின் குறித்த பிரமிட் கும்பல் அதே சூரிய கலத்தை ஏதாவது ஒரு நாட்டில் இருந்து இறக்குமதி செய்து 50 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்கின்றது. இதை வாங்கும் ஒரு நபர் தனக்கு தெரிந்த இரு நபர்களை அந் நிறுவனத்திற்கு அறிமுகப்படுத்தினால் அந் நபருக்கு குறித்த ஒரு தொகை கொடுப்பதாக உறுதியளிக்கப்படுகின்றது.

இதே வேளை அறிமுகப்படுத்தி நபர் களும் வேறு சிலரை அப் பொருளை வாங்கச் செய்தால் முதலில் அவர்களை அறிமுகம் செய்த நபரும் பின்னர் அறிமுகம் செய்த நபர்களும் புள்ளிகள் வழங்கப்பட்டு பெரு மளவு நிதி வரும் என ஏமாற்றப்படுகின்றது.

இவ்வாறான ஒரு நிலை குறித்த ஒரு மட்டத்துடன் நின்று விடும். ஏனெனில் இவற்றை வாங்குவதற்கு ஆட்கள் இல்லாத காரணத்தாலும் போட்டி நிலை ஏற்படுவதாலும் இவர்களது நோக்கம் தடைப்பட்டுவிடும்.

இதே வேளை இவர்களது தலையில் பெறுமதி இல்லாத சூரிய மின்கலத்திற்கு மேலதிகதொகையும்கட்டப்பட்டுநிர்க்கதியில் நிற்கும் நிலை தோன்றும் பிரமிட் முறையை இலங்கையில் தடைசெய்துள்ளது மத்திய வங்கி. அது சட்டவிரோதமானதும் சிறைத் தண்டனை வழங்கப்படவேண்டியதுமான ஒரு செயல் எனவும் மத்தியவங்கி அறிவித்தும் குறித்த பிரமிட் முறையை வடபகுதி மக்களின் தலையில் கட்டி அவர்களை பணமற்றவர்களாக முயற்சிக்கின்றன

தென்பகுதியில் இருந்து பல்வேறு பெயர்களில் இந்த மோசடிக்கும்பல்கள் படையெடுக்கின்றனர். பிரமிட்முறை மத்திய வங்கியால் தடை செய்யப்பட்டுள்ளதென்பது எல்லோருக்கும் தெரிந்திருப்பதால், இவர்கள் கூறும் முதலாவது பொய் இது பிரமிட் முறையல்ல. தமிழ்சினிமா நாயகர்கள் கன்னத்தில் ஒரு மரு வைத்து மாறுவேசம் போடுவதைப் போல இவர்கள் ஏதாவது சிறிய மாற்றம்சொல்லி, இது பிரமிட்முறையல்ல என நம்ப வைக்கிறார்கள்.

இவ்வாறான பிரமிட் முறையில் கொள்ளையடிக்கும் கும்பலின் வலையில் படித்தவர்கள்,உயர்பதவியில்இருப்பவர்களும் வீழ்வதுதான் அதிர்ச்சியானது.

இது எவ்வாறான ஏமாற்று வேலை என்பதற்கு ஒரு விளக்கம், ஒரு பொருளை இருவருக்கு விற்பனை செய்து அவர் இன்னும் இருவரை அப் பொருளை வாங்க செய்கின்றார்.

அப்போது அவருக்கு குறித்த ஒரு புள்ளி வழங்கப்படும். அப் பொருளை வாங்கிய இருவரும் வேறு இவ்விருவருக்கு அறிமுகப்படுத்தும் போது முதலில் உள்ளவருக்கும் பின்னர் அறிமுகப்படுத்திய இருவருக்கும் புள்ளிகள் வழங்கப்படும்.


இதே போல் இரண்டின் அடுக்கில் இது பெருகிக் கொண்டு போகும். அப்போது இந்த பிரமிட் முறை 220 ம் அடுக்கில் பத்து இலட்சத்தைத் தாண்டிவிடும். இத் தொகை குடாநாட்டின் சனத் தொகையின் கிட்டத்தட்ட இரு மடங்காகும்.

குறித்த ஒரு நபரைத் தாண்டி இருபதாவது நபரின் அடுக்குக்குள்ளேயே இந்த பிரமிட் முறையால் ஏராளமானவர்கள் நடுத்தெருவில் வந்துவிடுவர். இந்த முறையால் இலாபமடையப்போவது 28 ம் அடுக்கு வரை உள்ளவர்கள் மட்டுமே.

இது சாதாரணதர கணித அறிவு உள்ள வர்களே யோசித்துக் கண்டுபிடிக்கும் விடய மாகும். ஏற்கனவே யாழ்ப்பாணம், வன்னி ஆகிய இடங்களில் உள்ள மக்களை ஆட்டிப் படைக்கும் லீசிங், சீட்டு, மற்றும் தரமற்ற பொருட்கள் விற்பனை ஆகியவற்றுடன் இந்த பிரமிட் என்னும் அரக்கனும் சேர்ந்துள்ளதை அனைவரும் உணருதல் அவசியம்.

நவீனரக கார்களிலும் ஆடம்பரத் தோற்றங் களுடனும் இவ்வாறானவர்கள் உங்களை நோக்கி வரலாம். அப்பொழுது நீங்கள் எச்சரிக் கையாக இருக்க வேண்டியது அவசியம்.


**தமிழ்சினிமா நாயகர்கள் கன்னத்தில் ஒரு மரு வைத்து மாறுவேசம் போடுவதைப் போல இவர்கள் ஏதாவது சிறிய மாற்றம்சொல்லி, இது பிரமிட்முறையல்ல என நம்ப வைக்கிறார்கள். பிரமிட் முறையில் கொள்ளையடிக்கும் கும்பலின் வலையில் படித்தவர்கள், உயர்பதவியில் இருப்பவர்களும் வீழ்வதுதான் அதிர்ச்சியானது.**






சீனாவில் உள்ள அன்பிங் பாலம். 12ம் நூற்றாண்டில் மிகப் பெரிய கற்களால் உருவாக்கப்பட்டது. 2 கி.மீ. நீளமானது. 1138ம் ஆண்டிலிருந்து 1151ம் ஆண்டு வரை இந்தப் பாலம் கட்டி முடிக்கப்பட்டது. படகு வடிவில் உள்ள 331 உத்திரங்கள் மீது பாலம் அமைக்கப்பட்டிருக்கிறது. மிகப் பெரிய உத்திரம் 25 தொன் எடை கொண்டது. பாலத்தின் இரு பக்கங்களிலும் 22 மீற்றர் உயரத்துக்கு ஆலயம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து பார்த்தால் பாலம் முழுவதையும் காண முடியும். பாலத்தில் ஆங்காங்கே 5 கூடாரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நடந்து வருகிறவர்கள் களைப்பாறுவதற்கும் இயற்கைக் காட்சிகளைக் கண்டு ரசிப்பதற்கும் இவை உதவின. தற்போது ஒரே ஒரு கூடாரம் மட்டுமே நல்ல நிலையில் இருக்கிறது. வெறும் கற்களால் மட்டுமே கட்டப்பட்டுள்ள இந்தப் பாலம் 8 நூற்றாண்டுகளைக் கடந்தும் கம்பீரமாக நின்றுகொண்டிருக்கிறது.

வைத்தியசாலையில் நோயாளியொருவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொண்டபோது திடீரென தீப்பற்றியெறிந்துள்ளது. ஒட்சிசன் உபகரணமொன்றை வைத்தியர் பயன்படுத்தியபோது தீப்பற்றி எரிந்துள்ளது. ஒட்சிசன் மட்ட அதிகரிப்பால் அமெரிக்காவில் வருடாந்தம் 500 வரையான இப்படியான தீ விபத்துக்கள் நடக்கிறதாம்.






கேரளாவைவை சேர்ந்த சுரேஷ் என்ற இந்த இளைஞன் வனபாதுகாவலராக பணிபுரிகிறார். பாம்புகள் என்றால் உயிர். இதுவரை 30,000 மேற்பட்ட பாம்புகளை பிடித்துள்ளார். அவற்றில் 3,000 பாம்புகளிடம் கடியும் வாங்கியுள்ளார். ரெபயவகை பாம்பு முட்டைகளை சேகரித்து முட்டை பொரித்ததும் குட்டிகளை அர்ந்த காட்டில் விட்டுவிடுகிறார். இந்த பாம்பு பிரியரை பற்றி கேள்விப்பட்ட இங்கிலாந்து இளவரசர் சார்ள்ஸ் நேரில் அழைத்து சந்தித்துள்ளார்.



இந்தோனேசியாவில் கரையொதுங்கிய பொம்மையிது. முஸ்லீம்களின் பண்டிகை தினமொன்றில் கரையொதுங்கியதால், கடவுளால் அனுப்பப்பட்ட தேவதையென கிராம மக்கள் அதை பயபக்தியுடன் கரைக்கு எடுத்து வந்து ஆசி வாங்கினார்கள். விடயம் காட்டுத்தீயாக பரவ அங்கு பெருமளவு மக்கள் குவிய தொடங்கியுள்ளனர். விடயத்தை அறிந்து பொலிசார் அங்கு சென்றபின்னர்தான், அது நீண்டகால கடற்பயணம் செய்பவர்கள் பாவிக்கும் செக்ஸ் பொம்மையென்பது தெரிய வந்தது. காற்றை நிரப்பி பாவித்துவிட்டு, பின்னர் சுருட்டி வைக்கும் வசதி கொண்டது.



ஷாஜகானுக்கு 600 ஆண்டுகளுக்கு முன்பே ராணி உதயமதி தனது கணவர் பீம் தேவுக்காக தாஜ் மஹாலை விட அழகான, பிரம்மாண்டமான ஒரு நினைவு சின்னத்தை உருவாக்கியுள்ளார். ராணி கி வாவ் என்பது அதன் பெயர். கிணற்று வடிவத்தில் உள்ள கட்டிடங்கள் உலகில் மிக, மிக அபூர்வம். இந்தியாவில் கிணற்று வடிவில் உள்ள மிக பிரம்மாண்டமான அரண்மனை ராணி கி வாவ். இது எந்த அளவு பிரம்மாண்டமான கட்டிடம் என்பதற்கு ஒரு சிறிய உதாரணம். இந்த கட்டிடத்தின் உள். 30 கிலோ மீட்டர் நீள சுரங்க பாதை. ஆங்கிலத்தில் Tunnel என்று சொல்வார்கள். இந்த ராணி கி வாவ் இன்றைய குஜராத் மாநிலத்தில் சித்பூர் என்கிற ஊருக்கு அருகில் உள்ள பதான் pathan என்கிற ஊரில் உள்ளது.

சீனாவில் குழந்தையொன்று 15 கைவிரல்கள், 17 கால் விரல்களுடன் பிறந்துள்ளது. இந்த 3 மாத குழந்தையின் வலதுகையில் 7 விரல்களும், இடதுகையில் 8 விரல்களும் உள்ளன. கர்ப்பத்தின் முன்னர் பலமுறை ஸ்கான் செய்தும் இந்த பிரச்சனையை வைத்தியர்கள் கண்டறியவில்லை. இதேவேளை, குழந்தையின் தாயாருக்கும் கை,கால்களில் ஒவ்வொரு மேலதிக விரல் உள்ளது.





தங்கச் சட்டை மனிதர் என்று அழைக்கப்படும் மகாராஷ்டிராவின் புகழ்பெற்ற தொழில் அதிபரும் அரசியல்வாதியுமான பங்கஜ் பராக் கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார். சுமார் 98,35,099 ரூபா செலவில் உலகின் மிக விலையுயர்ந்த தங்கச் சட்டை அணிந்தவர் என்று அவருக்கு கின்னஸ் உலக சாதனை புத்தகம் சார்பில் சான்றிதழ் வழங்கி கௌரவித்துள்ளது. தேசிய வாத காங்கிரஸ் கட்சியை சேர்ந்த 47 வயதாக பங்கஜ் நாசிக் மாவட்டம் இயோலா நகர துணை மேயராக பதவி வகித்து வருகிறார். 2 ஆண்டுகளுக்கு முன் தனது 45 ஆவது பிறந்த தினத்தினை முன்னிட்டு இந்த தங்கச்சட்டையினை அவர் தைத்தார்.

முகவர் சேவை
காணி, வீடு வாங்குவதற்கு, விற்பதற்கு நாடுங்கள் .
சிவா முகவர் சேவை
விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு.
Tel : 077 142 3305

ரீப்பை, தீராந்திகளுடன் வீட்டு கூரைவேலைகளுக்கான பொருட்களை குறைந்த விலையில் பெற்றிடவும்,
உங்கள் இல்லங்கள், கடைகளுக்கான கூரை வேலைகளை குறுகிய காலத்தில் தருகின்றார்கள்...

கோப்பாய் சந்தி, கோப்பாய், யாழ்ப்பாணம். தொ.பே : 077 272 6660




# CELLTRONICS (PVT) LTD.

## வழங்கும் அரிய வாய்ப்பு



ஜப்பான் NIKAI TV 32' இப்போது...

NIKAI JAPAN Makes real sense

36% off

~~38,900/=~~

24,900/= மட்டுமே

ஒரு வருட உத்தரவாதத்துடன்
இன்றும் சில நாட்களுக்கு மட்டுமே...

FLASH DEAL

Celltronics

# 127, K.K.S. Road, Jaffna. | Tel/Fax : +94 212 223393 | Mob : 077 4978 782






கண்டி வீதி, நாவற்குழி சந்தி, நாவற்குழி.

TEL : 021 221 3553 | 077 821 3071

இப்பத்திரிகை நோர்சீ மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால்
172, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஈஸ்வா டிஜிற்றல் பிரஸில் அச்சிட்டு 08.05.2016 அன்று வெளியிடப்பட்டது